7208

# லவகுசா நாடகம்

பதிப்பு

இ. ஜெயபிரகாஷ்

தமிழ் இலக்கியத்துறை

சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னை - 600 005.

ஜூன் - 2008

# லவகுசா நாடகம்

சுவடியியல் மற்றும் பதிப்பியல் நிறைசான்றிதழுக்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்படும் பதிப்பேடு


பதிப்பு

**இ. ஜெயபிரகாஷ்**

நெறியாளர்

**வீ. அரசு**

பேராசிரியர் - தலைவர்



**தமிழ் இலக்கியத்துறை**

**சென்னைப் பல்கலைக்கழகம்**

**சென்னை - 600 005.**

**ஜுன் 2008**

"சுவடியியலும் பதிப்பியலும்"
பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

**எண்: 53010725**

# நெறியாளர் சான்றிதழ்

**வீ. அரசு**
பேராசிரியர் - தலைவர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - *600 005.*

சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத் துறையில் **"சுவடியியலும் பதிப்பியலும்"** பட்டயப்பேற்றிற்காகப் **"லவகுசா நாடகம்"** என்னும் தலைப்பிலான கூத்துப் பிரதியை **இ. ஜெயபிரகாஷ்** அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்பு செய்தார் என்றும், இந்த பதிப்பேடு அவரின் சொந்த முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கின்றேன்.

நெறியாளர்,

(வீ. அரசு)

நாள்: -2008

இடம்: சென்னை-5.

# பதிப்பாளர் உறுதிமொழி

**இ. ஜெயபிரகாஷ்**
*தமிழ் இலக்கியத்துறை,*
*சென்னைப் பல்கலைக்கழகம்,*
*சென்னை - 600 005.*

**சுவடியியலும் பதிப்பியலும்** என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத்துறைக்கு அளிக்கப்பெறும் **"லவகுசா நாடகம்"** என்னும் தலைப்பிலான இப்பதிப்பேடு என் சொந்த முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கின்றேன்.

பதிப்பாளர்,

(இ. ஜெயபிரகாஷ்)

நாள்:
இடம்: சென்னை-5.

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பதிப்புரை | 11-20 |
| நன்றியுரை | 21-22 |
| விநாயகர் துதி | 23 |
| லவகுசா நாடகம் | 24-138 |
| பின்னிணைப்பு | |
| பாடல் முதற்குறிப்பகராதி | 139-145 |

# பதிப்புரை

நாட்டார் தெய்வத்திற்கும் தெருக் கூத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. சித்திரை, வைகாசி உள்ளிட்ட மாதங்களில் நாட்டார் தெய்வங்களுக்கு பெரும்பான்மையாக விழா எடுக்கப்படும். இந்த குதூகலத்திற்குத் தெருக்கூத்து இல்லாமல் இருக்காது. இக்கூத்து நாட்கணக்கில் விரிவதும் சுருங்குவதும் அவரவர்கள் சார்ந்துள்ள பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டது. இராமாயணம், மகாபாரதம் போன்ற கதைகளை நிகழ்ததிக் காட்டுவர். கிளைக் கதைகளும் இடம் பெறும்.

இராமாயணம், பாரதம் போன்றவற்றினை மக்கள் பெரிதும் அறிந்திருப்பர். இதனை மக்களிடத்தில் கொண்டு செல்வதற்கு நாடகம் (தெருக்கூத்து) ஊடகமாக செயல்பட்டது. அதற்கு, திருவிழாக்கள் அடித்தளமாக இருந்து வந்தது; வருகிறது.

இதிகாசத்திலும், புராணத்திலும் வரும் கதாபாத்திரங்கள் இந்த மண்ணில் வாழ்ந்ததாக தவறானப் புரிதல் நிலவி வருகிறது. அதில் இடம்பெறும் செய்திகள் நிசமானவை என்பதாக நம்பப்படுகிறது. அந்த அளவிற்கு அழுத்தமான பாதிப்பை இராமாயணம் மக்கள் மனத்தில் ஏற்படுத்தியிருக்கிறது எனலாம். அதற்கு இராமாயணத்தில்

இடம்பெறும் கற்பனாவாதத் தன்மை மக்களின் மனத்தை குழப்பியிருக்கிறது. எது எப்படி இருந்தாலும் கூத்தும் நாடகமும் இம்மண்ணின் அடையாளங்களாகத் திகழ்கின்றன. அது மக்களின் கலை வடிவம்.

இந்நூல் இராமாயணத்தை அடியொற்றி எழுந்த லவகுசா நாடகமாகும். இது லவகுசா என்று சுட்டப்படுவதற்குக் காரணம் யாதெனில் கம்பர் பனிரெண்டாயிரம் கவிகளாக குசன் பிறக்காததோடு எழுதினார். பிறகு சீர்காழியைச் சார்ந்த அருணாசல கவிராயமும் வரகுடியைச் சேர்ந்த சுப்பராயபிள்ளையும் சேர்ந்து இராமனுக்கும் சீதைக்கும் குசன் என்கின்ற குழந்தை பிறந்ததாகவும், சீதை காட்டில் இருக்கும்போது குசன் காணாமல் போனதனால் வால்மீகராசீர்மத்தை அணுகி புலம்ப அவர் தெப்பபில்லால் ஒரு குழந்தை செய்து அதற்கு உயிரூட்டியதும் மீண்டும் காணாமல் போன குசன் வரவும் தெப்பபில்லால் உயிரூட்டப்பட்ட அந்த குழந்தைக்கு லவன் என்று பெயரிடப்பட்டது. எனவே குசனையும் லவனையும் சேர்த்து ‘லவகுசா நாடகம்’ என வழங்கலாயிற்று. இக்கதையையே கருவாகக் கொண்டு ‘குசலவ நாடகம்’ என்னும் கூத்துப்பிரதியும் அச்சில் காணக் கிடைக்கிறது.

இந்நூலினுள் "சீர்காழியைச் சார்ந்த அருணாசல கவிராயரும் வரகுகுடியைச் சேர்ந்த சுப்பராயபிள்ளையும் சேர்ந்து லவகுசா என்னும் சரித்திரத்தைக் கவிகளாகவும் வசனங்களாகவும் பாடினார்கள்" என்கின்ற குறிப்பும், குளத்தங்க நல்லூரைச் சேர்ந்த பஞ்சநாதபிள்ளையும், அவரது குமார் அப்பாவு பிள்ளையும், வேளப்பூண்டியைச் சேர்ந்த பெரியசாமி புலவரும் இராமகாவியத்தை சிற்சில வர்ணமெட்டுகளாகவும், வசனங்களாகவும் அமைத்தார்கள்" என்கின்ற குறிப்பும் நமக்கு கிடைக்கின்றது.

1881-ஆம் ஆண்டு சீர்காழி அருணாசலக்கவிராயர் பாடிய "இராமநாடகம்" பரமசிவமங்கலம் - அண்ணாசாமி முதலியாரின் குமாரர் முனிசாமி முதலியார் அவர்களின் சகலகலாவர்த்தினி அச்சுகூடத்தில் பதிப்பிக்கப் பட்டுள்ளது. இந்நூலினுள்ளே இராஜசேகர முதலியாரால் இயற்றப்பட்ட "இராமாயண ஓரடிகீர்த்தனை"யும் இடம் பெற்றுள்ளது. இது குறித்த குறிப்பு அந்நூலின் முகப்பு பக்கத்திலேயே இடம் பெறுகிறது. இந்நூலையே 1915 இல் "இராமநாடகக் கீர்த்தனை" என்னும் பெயரில் (longmans, Green & Co, 167 - Mount Road, Madras, Bombay and Culcutta) வெளியிடப்பட்டுள்ளது. அருணாசலக் கவிராயர் இயற்றிய 'இராம நாடகம்' பாயிரம் முதலாக பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய

காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்று இராமாயண காண்ட பகுப்பு முறைகளையே கொண்டுள்ளது. 1914-இல் ராவ்ஸா ஹிப் ச.பவானந்தம் பிள்ளை அவர்கள் "இராமநாடக மஞ்சரி பாதுகாபட்டாபிஷேகம்" என்னும் நூலை இயற்றியுள்ளார்.

இவற்றில் யாவும் குசன்லவன் இடம் பெறவில்லை. அவை இராமனின் பாதுகா பட்டாபிஷேகத்தோடு முடிவடைந்துவிடுகிறது. மேலும், இவை கூத்துப்பிரதியும் அல்ல.

1907-இல் நாராயணசாமி பிள்ளையவர்களது நற்றமிழ்விலாச அச்சியந்திரசாலையில் (சென்னைப் புரசை) பதிப்பிக்கப்பட்ட இராமநாடகமென்று வழங்குகின்ற "குசலவ நாடகம்" ராமர் அரசிருத்தல், சீதை பிரிதல், வால்மீகர் ஆசீரமத்தில் பிள்ளை பெறல், லவன், குசலவன் யுத்தம், அஸ்வமேதயாகம், குசலவனுக்கு திருக்கலியாணம், இளவரசுப் பட்டம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளைக் கொண்ட கூத்துப்பிரதியாகும். இதனை இயற்றிய ஆசிரியரின் பெயர் தெரியவில்லை.

1977-ஆம் ஆண்டு ஸ்ரீராமர் அஸ்வமேதயாகம் எனும் 'குசலவ நாடகம்' கூத்துப்பிரதியை ஏ.ஆர்.தேவநாயகி அம்மாள் பதிப்பித்துள்ளார். இந்நூல் எஸ்.சண்முகம்

உபாத்தியாயரால் இயற்றப்பட்டது. இந்நூல் பொருண்மை அடிப்படையில் 1907இல் வெளிவந்தக் கூத்துப்பிரதியோடு ஒத்துப்போனாலும் பாடல்கள் வேறுவேறானவையே.

ஈழத்தமிழர்கள் தங்கள் தேசத்தில் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் நிகழும் நாடகத்தினை இரண்டாகப் பகுப்பர். (i) வடமோடி (ii) தென்மோடி. இதில் குசலவன் என்னும் நாடகம் வடமோடி வகைமையில் உள்ளடக்கலாம். இதனை, பேராசிரியர் சி. மௌனகுரு அவர்களின் “ஈழத்தில் தமிழ் நாடக அரங்கு” என்னும் நூலின் ஊடாக நாம் அறிகிறோம்.

லவகுசா கதையைக் தெருக்கூத்தின் மூலம் கூறும் இப்பிரதி தாள் சுவடி. இதில், ராமர், லட்சுமணன், பரதன், சத்துருக்கன், சீதை, வதிஷ்டமுனிவர், தளகர்த்தன் போன்ற கதாபாத்திரங்கள் இருந்தாலும் ராமரைத் தவிர்த்து பிறர் யாருக்கும் வசனமும் பாட்டும் இடம் பெறவில்லை. யாருக்கு எங்கே வசனம் வர வேண்டும் என்கின்ற குறிப்பு இடப்பட்டுள்ளது. எனினும், இந்நாடகத்தில் இடம் பெறுகிற கதையை தெளிவாக புரிந்துகொள்ள முடியும்.

**லவகுசா நாடகம் - கதைச் சுருக்கம்**

சீதை ஐந்து மாத கர்ப்பிணியாக இருக்கும்போது ராமர் சீதாவைப் பார்த்து,

"உந்தனுக்கு தேவையான வரங்களை
எந்தன் முன்னாலே சொன்னாலே தந்திடுவேன்"

என்கிறான். மறையோர் என்ற பிராமண பெண்மணிகளாக இருந்தாள் மூன்று வரங்கள் கேட்க வேண்டும். அரசகுல பெண்மணிகளாக இருந்தால் இரண்டு வரங்கள் கேட்க வேண்டும். புலை என்ற நீச பெண்கள் எப்போதும் மாமிசத்தோடு உணவு கேட்பார்களாம். செட்டியார் பெண்களாக இருந்தால் கணக்கு தவராத ஓர் ஆண்புத்திரவரம் ஒன்று கேட்பார்களாம். இது யாவும் பெண்கள் கற்பிணிகளாக இருக்கும்போது கேட்க வேண்டியதாம். சீதை அரசர்குல பெண் ஆதலால் இரண்டு வரம் கேட்க வேண்டும்.

1. சீதை இரண்டு வரத்தில் ஒரு வரமாக தன் குலம் விளங்க ஓர் ஆண் புத்திர வரம் கேட்டுக் கொண்டாள். ராமரும் சீதைக்கு குழந்தை வரம் அளித்ததாக பதில் கூறுகிறார்.

2. இரண்டாவது வரமாக சீதை, தான் கானகம் செல்ல வேண்டும் என்று கேட்கிறாள். ராமர்,

"கானகம் போகவேண்டாம் கண்ணே எந்தன் சீத்தா
உன் கற்பத்திற்கு பேதகம் வரும் கண்ணே எந்தன் சீத்தா"

என்று கூறி, கானகம் சென்று ஏதாவது விபரீதம் நடந்துவிட்டால் என்ன செய்வது மீண்டும் தெரிவிக்கிறேன்

வரத்தை மாற்றி கொள்வாய் என்கிறான். சீதை தான் கானகம்தான் போக வேண்டுமென்கிறாள். ராமனோ "எனக்கு பனிரெண்டாம் இடத்தில் சனி மகுத்துவத்தால் நானும் பதினான்கு ஆண்டு காலம் வனவாசம் அனுபவித்தேன். சனியனின் பார்வை உனக்கு இன்னும் இருக்கிறது. யார் என்ன செய்ய முடியும் அப்படியே ஆகட்டும்" என்கிறான்.

ராமர் பதினான்கு வருடம் காட்டில் இருந்து வந்ததால் தலையாரிமார்களை தனது பட்டணத்திலுள்ள 4448 வீதிகளிலும் சோதனை செய்து வருமாறு ஏவுகிறான்.

வண்ணார வீதியில், வண்ணான் ஒருவன் தன் மனைவியை அடிக்க அவள் பிணங்கி தாய்வீடு சென்றுவிட்டாளாம். அவள் தனியே சென்றதனால் அவருடைய கணவன் மீண்டும் அவளை அழைத்து வந்து குடும்பம் நடத்த மறுத்துவிட்டான். இவனின் தாய் "சிறையிருந்த சீதையை சிறைமீட்டு வாழும் இந்நாட்டின் ராமபிரானின் குடும்பத்தைவிட உன் குலம் என்னடா உயர்ந்தது என்று கேட்கிறாள். அதற்கு அவனோ ராமரின் குலமோ சூரிய குலம் அவர்களுக்கு அடுக்கலாம். என் குலம் வீரபத்திர குலம் எனக்கு அடுக்காது என்று தெரிவிக்கிறான். அங்கு வந்த காவலர்கள் வண்ணானை இழுத்துக் கொண்டு போய் ராமரிடம் நிறுத்தி நடந்ததை

சொல்கிறார்கள். ராமர் சந்தேகத்தை / சமூக சந்தேகத்தை தீர்த்துக் கொள்ள ஏற்கனவே சீதை கானகம் செல்ல வேண்டும் என்று கேட்ட வரத்தை சாக்காக வைத்து, சீதையைக் கானகத்திற்கு அனுப்புகிறான்.

சீதை கானகத்திலிருக்கும்போது ஆண் குழந்தை ஒன்று பிறக்கிறது. அக்குழந்தைக்கு 'குசன்' என்று பெயரிடுகின்றாள். ஒருமுறை 'குசன்' விளையாட்டுப் பருவத்தில் காணாமல் போய்விடுகிறான். சீதை அவனைத் தேடி காடெங்கும் அலைந்து திரிகிறாள். அவன் கிடைக்கவில்லை. வால்மீகரை அணுகி நடந்ததை கூறுகிறாள். வால்மீகர் தெப்பபில்லால் குழந்தை உருவம் செய்து அதற்கு உயிரூட்டுகிறார். அது 'குசன்' போன்றே காணப்படுகிறது. இதற்கு 'லவன்' என்றும் பெயர் சூட்டுகிறார்கள். மீண்டும் காணாமல் போன குசன் வந்துவிடுகிறான். ஏது செய்வது அறியாமல் சீதை குசன், லவன் இருவரையும் வளர்க்கிறாள்.

ஒரு சூழலில் ராமருக்கும் குசலவனுக்கும் போர் நடக்கிறது.

"தாரத்தை தானிழந்து தம்பிமார் தனையிழந்து
சீரற்ற பிள்ளையாலே என் சீமைகள் எல்லாம் தோற்றேன்"

- என்று ராமர் புலம்புகிறார். மேலும், மூர்ச்சையானார். வால்மீகர் ராமரை எழுப்புகிறார்.

ராமரோ, "சீதைக்கு நான் வரம் கொடுத்தது ஒரு குழந்தைக்கு இப்போது இரண்டு குழந்தைகள் இருக்கிறார்களே அதுதான் சந்தேகம். அதன் விபரத்தை தெரிவிக்க வேண்டும் என்றான். வால்மீகர் நடந்ததை கூறுகிறார்.

ராமனோ "தாங்கள் சொல்வதை ஒப்புக் கொள்கிறேன். உலகம் சந்தேகப்படும் அதனால் அக்கினியை வளருங்கள். அதில் சீதையும் குழந்தைகளும் இறங்கி வரட்டும் பிறகு அழைத்துச் செல்கிறேன்" என்கிறான். அதன்படியே இறங்கி வருகிறார்கள்.

ராமர் "சுவாமி தாங்களும் அயோத்திக்கு வந்து எனக்கு மகுடமும் குழந்தைகளுக்கு இளவரசு பட்டமும் சூட்ட வேண்டும்" என்று கூறுகிறான். இறுதியாக, அருமை தம்பிமார்களே சேனைகளே, கண்மணி அருமை சீத்தா வாருங்கள் அனைவரும் அயோத்திற்கு செல்வோம் என்று ராமர் கூறுவதோடு முடிவடைகிறது. இது இப்பிரதியின் கதைச் சுருக்கம்.

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம் கீழநெமிலி கிராமத்தில் வசிக்கும் திரு.சி.அன்பழகன் கூத்து வாத்தியாரிடம் இருந்து இப்பிரதி பெறப்பட்டது. எந்தவித சலனமுமில்லாமல் எனக்கு அவர் இதனை தந்தார்

என்பதை நான் மனமுவந்து கூற கடமைப்பட்டிருக்கிறேன். அவருக்கு என்றென்றும் என் நன்றி. இவர் 25 வருட காலமாக இதனை தொழிலாக மேற்கொள்கிறார். அவரிடம் உரையாடிய போது இப்பிரதியை அவருக்கு மா.சொக்கலிங்கம் என்பவர் தனக்கு தந்தார் என்று கூறினார். கூத்தின் மீது அளவளாவிய பற்று கொண்ட அவர் தான் இறந்தாலும் கூத்து இறக்காது என்கின்ற நம்பிக்கை உடையவர்.

# நன்றியுரை

"சுவடியியலும் பதிப்பியலும்" என்னும் பட்டயப் பேற்றிற்காக என்னை நெறிப்படுத்திய எம்துறை பேராசிரியர் தலைவருமான **வீ. அரசு** அவர்களுக்கு என் நன்றி.

அச்சுப் பிரதியையே வாசித்துப் பழகிய எனக்கு சுவடியை முதன் முதலில் 'சுவடியியல்' வகுப்பில் என் கையில் கொடுத்து வாசிக்க கற்றுத்தந்த எம் துறை ஆசிரியர் **முனைவர் ய. மணிகண்டன்** அவர்களுக்கு என் நன்றி.

"**குசலவா நாடகம்**" என்னும் கூத்துப் பிரதியை பதிப்பதற்கு அது தொடர்பான புத்தகத்தை எனக்கு வழங்கிய எம்துறை ஆசிரியர்கள் **முனைவர் கோ. பழனி** அவர்களுக்கும், **முனைவர் ஆ. ஏகாம்பரம்** அவர்களுக்கும் என் நன்றி.

"குசலவா நாடகம்" என்னும் கூத்துப் பிரதியை பதிப்பிப்பதற்கு எனக்கு வழங்கிய கூத்து வாத்தியார் **சி. அன்பழகன்** அவர்களுக்கும் என் நன்றி.

இப்பிரதியை பதிப்பதற்கு உறுதுணையாக இருந்த அண்ணன்கள் **என். செல்வராஜ், க. செந்தமிழ்ச் செல்வன், க. செந்தில்ராஜா, மு. தேவராஜ், பிரேம், பச்சைநிலா, பாஸ்கர், கன்னியம் அ. சதீஷ். த. தனஞ்செயன்** அவர்களுக்கும் நண்பர்கள் **க. அமரேசன், மோகன், நிஷா, முருகன், மாயவன், இளையராஜா, பாலசுந்தர்** அவர்களுக்கும் என் நன்றி.

இதுநாள்வரை என் வளர்ச்சியில் உறுதுணையாக இருக்கும் என் தாய் திருமதி. பூங்கோதை அவர்களுக்கும், தந்தை திரு. இளையபெருமாள் அவர்களுக்கும் என் ஆயா கொளஞ்சியம்மாள் அவர்களுக்கும் நடுத்தந்தை திரு. பூவராகவன் அவர்களுக்கும், சிறிய தந்தை திரு. தங்கபாண்டியன், பா. இராஜவேல் அவர்களுக்கும், தம்பிகள் பாலகிருஷ்ணன், ஜெய்சங்கர், பால்ராஜ், அன்புராஜ், அன்புமணி, சுமன், தங்கை புஷ்பா அவர்களுக்கும் என் நன்றி.

இதனைப் பதிப்பிப்பதற்கு சிறந்த முறையில் தட்டச்சு செய்து கொடுத்த அண்ணன்கள் ரெ. பாபு, ப. பாலாஜி அவர்களுக்கும் அக்கா கு. ஆனந்தி அவர்களுக்கும் நன்றி.

இ. ஜெயபிரகாஷ்



# விநாயகர் துதி

விநாயகனே வினைதீர்ப்பவனே
        வேள முகத்தோனே ஞான முதல்வனே (விநா)
குணாநிதியே குருவே சரு(ர)ணம்
        குறைகள் களைய இதுவே தருணம் (விநா)
கணநாதனே மாங்கனியை உண்டாய்
        கதிர்வேலவனை கருத்தில் கொண்டாய்
உமாபதியே உலகம் என்றாய்!
        ஒருசுற்றினிலே வலமும் வந்தாய். (விநா)

# லவகுசா நாடகம்

**ராமர் : விருத்தம் பைரவி**

காரணமாம் ஜெகது குருகிருபையாலும்
காளிகாதேவிஅம்மன் கடாட்சத்தின் பெருமையாலும்
பூரணமாய் விளங்கும் நற்காரிகையே
தங்கள்பொற் பாதகமலங்கள் போற்றினேன்
தாரணியில் கிள்ளைமொழி உளறினால்போல்
சாற்றுவோம் இக்கவியை நாங்கள்

**ராமர் : விருத்தம் கேதாரம்**

ஆலிலைமேல் துயிலுகின்ற ஏகநாதன்
அரக்கர்குலம் தனையழிக்க மனதில்எண்ணி
சீலமுடன் தசரதற்கு மைந்தனாகி
செறுவயதில் தாடகைதனை வதைத்தேன்
வேலுமந்த அகலிகையின் சாபம்தீர்த்த
மிதுலை நகர்க்கேகி வில்லைதான் ஒடித்து
கோலமுள்ள ஜானகியை கைபிடித்த நேசன்
கோதண்ட ரெகுராமர் கொலுவில் வந்தேன்

**பாட்டு ஆதி தாளம்**

தேச தேச நற வாகனாதி பதி திக்கிலுள்ளோர் பிடை சூழவே
மகுடமுடி மன்னர் வந்து பணிந்திடவே
மாதர்கள் நடனங்கள் ஆடவே
தம்பிமார் மூவர்களும் சாம்புவ அனுமானும்
தளகர்த்தனும் பிடை சூழவே

அம்புவி அரசர்கள் கைப்பணம் கட்டவே
அந்தணர் மலர்மீறி தூவவே
ஒத்து பதிநெட்டு வாத்தியம் முழங்கவே
துத்து புல்லாங்குழல் ஊதவே.

கொட்டிய மத்தாளம் தாளமும் முழங்கிட
கோதையர்கள் நடனங்கள் ஆடவே
துஷ்டக்கை இராவணன் குலத்தை கருவறுக்க
சுவாமி பராக்கென்று சொல்லவே

கோடில் சூரியனை போல் நீடும் ராமச்சந்திரன்
கொலுவினில் வந்த வளர் நேர்மையோ

**பாட்டு ஆதிதாளம் கல்யாணி**

தேச தேசாதி மன்னன் திருவடி போற்றி செய்ய
ஜெயாஜெய என்று வானோர் செப்ப மலர்கள் கொய்ய
வானவர் அமரர்கள் வாழ்த்தி ஆசிகள் கூற
மந்திரி பிரதானியர் மகிழ்ந்திரு புறம் சார

இரு வஞ்சியர் ஆட என் தேவி கொஞ்சியே நாட
வேதங்கள் மிஞ்சியே பாட பகைஞர்கள் அஞ்சியே ஓட
அனுமான் அடியினை தாழ வாகு வலையமொடு வாகுபுஜ கிருது
ஆகு மனைத்தாங்கி ரெகு மன்னர் கை கொடுக்கும் (தேச)

**வசனம்**

*அன்பார்ந்த பெரியோர்களே அருமை தாய்மார்களே சகோதர சகோதரிகளே உங்கள் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி இக்காவியத்தை துவங்குகிறேன்.*

காளமேகம் நீலவர்ணம் என்றுச் சொல்லப்பட்ட சச்சுதாநந்த ஸ்ரூபமாய் விளங்கா நின்று இச்சபையில் அமர்ந்திருக்கும் புலவர் பெருமக்களே இந்த இராமாயணம் உற்பத்தி எப்படி யென்றால் ஆதியிலே பிர்மாவானவர் ஐநூற்று ஒரு கோடி விஸ்தாரமாக பாடினார் அதை வால்மீகர் மூவெட்டு இருபத்தி நான்காயிரம் சுலோபியமாக சமஸ்கிருத வடமொழியில் பாடினார். அதை கம்பர் பனிரெண்டாயிரம் கவிகளாக குசன் பிறக்காததோடு எழுதினார். பிறகு சீர்காழியைச் சார்ந்த அருணாசல கவிராயரும் வரகுகுடியைச் சேர்ந்த சுப்பராயபிள்ளையும் சேர்ந்து லவகுசா என்னும் சரித்திரத்தை கவிகளாகவும் வசனங்களாகவும் பாடினார்கள். பிறகு குளத்தங்க நல்லூரைச் சேர்ந்த பஞ்சநாதபிள்ளையும், அவரது குமார் அப்பாவு பிள்ளையும் வேளப்பூண்டியைச் சேர்ந்த பெரியசாமி புலவரும், இக்காவியத்தை சிற்சில வர்ண மெட்டுகளாகவும், வசனங்களாகவும் அமைத்து பெருமங்கலம் என்னும் சிற்றூரில் கம்பநாத சுவாமியின் ஆலயத்தின் முன்பதாக அறங்கேற்றம் செய்து மக்களின் நன் மதிப்பை பெற்றார்களாம்.

இப்பெருமைக்குரிய காவியத்தை நாங்கள் சிற்சில மாணவர்கள் ஒன்று சேர்ந்து இந்த பொன்னரங்க

மேடையில் நடத்த முன் வந்துள்ளோம். இதில் எவ்வித குற்றம் குறைகள் இருப்பினும் தாங்கள் குழந்தைகள் செய்யும் தவறை எவ்வாறு பொருத்துக் கொள்வீர்களோ அதுபோல் எங்கள் குற்றத்தையும் பொருத்து எங்கள் ஆசிரியர் அவர்களையும், நாடக அமைப்பாளர் அவர்களையும் கௌரவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**வசனம்**

அன்பர்களே இந்த "ராமா" என்றச் சொல் உற்பத்தி எப்படியென்றால் நாராயணா என்ற மந்திரம் விஷ்ணு நிலையாகி இதில் நாராயணா என்ற சொல்லில் இரண்டாம் எழுத்து 'ரா'வும் நமச்சிவாய என்ற மந்திரம் சைவ நிலையாகி நமச்சிவாயா என்ற சொல்லில் இரண்டாம் எழுத்து 'மா'வும் சேர்ந்து ராமா வென்றே பிறந்திருக்கிறதாம். இப்பெருமை ராம மந்திரத்தை அல்லும் பகலும் அறுபது நாழிகை நேரத்தில் மூனே முக்கால் நாழிகை நேரத்தில் வாய் பற்றி இமை மூடி நாசியை அடக்கி மௌனத்தை உன்னி ராமா, ராமா என்று ஜெபித்து வந்தால்,

**"நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே**
**தீமையும் பாவமும் சிதைந்தே தேயுமே**
**ஜென்மமும் மரணமும் அன்றே தீருமே**
**இன்மையில் ராமாவென்ற இரண்டு எழுத்தினால்"**

**வசனம்**

ராமா என்று உச்சரிப்பவர்களுக்கு நன்மையான காரியங்கள் வந்து சேரும். தீமையான காரியங்கள் யாவும் சகடைக்காலில் பட்ட பொருளைப்போல் தேய்ந்து விடுமாம். மரணத்தில் வேதனையே வராதாம். ஆகவே ராமா ராமா என்று சொல்லி மோட்சம் அடைய வேண்டும் என்றுச் சொல்லி கதையை துவங்குகிறேன் வணக்கம்.

**ராமர் : வசனம்**

அமைச்சரே வாருங்கள்.

**அமைச்சர் : வசனம்**

**ராமர் : வசனம்**

பிரதான் மங்கள முண்டா கட்டும் தாங்களை அழைத்த விபரம் என்ன வென்றால் அந்தபுரத்தில் இருக்கும் எனது அருமை தம்பி சத்துருக்கனை அழைத்து வருவீர்.

**சத்துருக்கன் : வசனம்**

**ராமர் : வசனம்**

அருமை தம்பி சத்துருக்கனா, மங்கள முண்டாகட்டும் உடல், உயிர், ஆவி என்றுச் சொல்லக்

கூடிய தம்பிமார்களில் ஆவியாக விளங்கும் சத்துருக்கனா நீங்கள் யாவற்றமான பேர்களும் வளமுடன் வாழ்நது வருகின்றீர்களா?

**சத்துருக்கன்: வசனம்**

**ராமர் : வசனம்**

சத்துருக்கனா மிகவும் சந்தோஷமடைந்தேன். என் அருகாமையில் அமர வேண்டும்.

(குறிப்பு: இதுபோல் பரதன், லெட்சுமணன் இருவர்களையும் அழைத்து விசாரிக்க வேண்டும்).

**ராமர் : வசனம்**

அமைச்சரே நான் சிற்றன்னை கைகேசியின் வரத்தின்படி, பதினான்கு ஆண்டு காலம் கானகம் சென்றபோது அருமை தம்பி பரதன் இந்நாட்டை அரசு செய்தான். நான் தற்போது அரசு செய்து வருகிறேன். அதனால் மக்களின் நிலை அறிய ஆவல் உடையவனாக உள்ளேன். உன் அபிப்பிராயத்தை தெரிவிப்பாய்.

**அமைச்சர் வசனம்**

**ராமர் : விருத்தம் மத்மாவதி**

மதி வளர் சுமந்திரரே சொல்லை கேளீர் பதியுடன் எனது செங்கோல் பாரெல்லாம் செழித்து ஓங்க விதி

*முறையே படியே நானும் விளம்பிட ஆவல் - கொண்டேன்*
*ஆதி விரைவாக நீங்கள் அன்புடன் பதில் சொல்வீரே.*

**பாட்டு ஆதி**

**தேவாலயங்களில் தீனம் ஆறுகால பூஜை**
**தினம் தினம் நடக்கின்றதா**

**ராமர் : வசனம்**

*பிரதான் நமது நாட்டிலுள்ள தேவாலயம், பிர்மாலயம், விஷ்ணுவாலயம் என்றுச் சொல்லக்கூடிய மூன்று ஆலயங்களிலும் ஆண்டவனுக்கு செய்யக்கூடிய ஆறுகால பூஜை விதிகள் நேம நிஷ்டை தவறாமல் நடந்தேரி வருகிறதா?*

**அமைச்சர் : வசனம்**

**ராமர் : வசனம்**

*அமைச்சரே பூலோகத்தில் பிர்மனுக்கு ஆலயம் இல்லைதான் அதற்கான விளக்கத்தை இதோ தெரிவிக்கிறேன். அதாவது படைக்கும் தொழிலையுடைய பிர்மாவோ ஆணுவங்கொண்டு காக்கும் தொழில் கொண்ட மகா விஷ்ணுவிடம் நம்மிருவர்களில் யார் உயர்ந்தவன் என்று வாதம்பேசி வம்பிழுத்தாராம். இதை அறிந்த சிவனோ அவர்கள் முன் தோன்றி உங்கள்*

வாதத்தை நிறுத்துங்கள் உங்கள் இருவர்களையும் நான் சோதனை செய்கிறேன். அதில் யார் வெற்றி அடைகின்றீர்களோ அவரே உயர்ந்தவர் என்றுச் சொல்ல, இருவரும் சம்மதம் தெரிவித்தார்கள். சிவனோ என் பாதத்தையும், தலை முடியையும் கண்டு வர வேண்டும் என்று பூமிக்கும் ஆகாயத்திற்கும் வானளாவி நின்று விட்டாராம். மகாவிஷ்ணு வராக அவதாரம் எடுத்து சிவனின் பாதங்காண பூமியை துளைத்து சென்றும் பாதங்காண முடியவில்லை. அதனால் மூச்சு திணரி பூலோகம் திரும்பினார் பாதி உடல் பூமியில் வந்ததும் விடிந்து விட்டது. அப்படியே நின்று விட்டார் அந்த இடந்தான் திருமுட்டம் என பெயர் பெற்று விளங்கியது. பிர்மாவோ தலைமுடியை காண அன்னபட்சியாக ரூபமெடுத்து ஆகாய மார்க்கமாக பறந்து சென்றார். தலைமுடியை காணமுடியவில்லை. மேலும், செல்ல முடியாமல் பாதி தூரத்திலே நின்று கொண்டிருக்கிறார். இவர் செயலை கண்ட சிவன் தன் தலை முடியில் இருந்த ஓர் தாழப்பூவை இறக்கி விடுகிறார். அப்பூவைக் கண்ட பிர்மா ஏ தாழம்பூவே நீ எங்கியிருந்து வருகிறாய் என்று கேட்க, நான் சிவனின் முடியிலிருந்து வருகிறேன் என்றது. பிறகு பிர்மா ஏ தாழம் பூவே நீ எனக்காக ஓர் பொய்ச்சொல்ல வேண்டும். அப்படி சொன்னால் உனக்கு வேண்டிய வரங்களை தருகிறேன். சொல்வாயா என்றார்.

தாழம்பூவும் சரி என்றது. அதாவது நான் சிவனின் தலை முடியை கண்டதா அன்னவரிடத்தில் தெரிவிக்க வேண்டும் என்றார், அதுவும் ஒத்து கொண்டது.

அதன்பிறகு சிவன் இவர்கள் இருவர்களையும் அழைத்து பாதத்தையும், முடியையும் கண்டவர்கள் யார் என்றார். மகாவிஷ்ணு சுாமி நான் கூர்மை அவதாரம் எடுத்து தாங்கள் பாதங்காண சென்றேன். முடியாமல் மூச்சு திணறி பாதி உடலுடன் பூமியில் நின்று விட்டேன் என்றார். பிர்மாவை பார்த்தார் சிவன் பிர்மாவோ சுவாமி நான் தாங்கள் முடியை கண்டேன். வேண்டுமானால் இதோ இந்த தாழம்பூவை கேளுங்கள் என்றார். தாழம்பூவும் உண்மைதான் என்றது. எறும்பு கடை யானை எண்பத்திரெண்டாயிரம் கோடி ஜீவராசிகளுக்கு படைக்கும் தொழிலையுடைய நீர் பொய்ச்சொன்ன காரணத்தால் இன்று முதல் உன்னை யாரும் வழிபட மாட்டார்கள். ஆலயமும் பூவுலகத்தில் இருக்காது என்றுச் சாபமிட்டார். அதனால்தான் பிர்மனுக்கு உலகில் எங்கும் ஆலயம் கிடையாது. அதுவுமன்றி சரஸ்வதியை பார்த்து பிர்மாவின் நாவில் குடியிருந்த நீ அவர் பொய்ச் சொல்வதை தடுக்காமல் இருந்த காரணத்தால் உனக்கும் இவ்வுலகில் ஆலயம் கிடையாது என்று சாபம் கொடுத்தார். பிரதான் சரஸ்வதிக்கும் இவ்வுலகில் ஆலயம் கிடையாது.

**அமைச்சர் : வசனம்**

**ராமர் : பாட்டு**

வேதாங்கமப்படி வேதியர் அனைவரும்
வேதங்கள் ஓதுகின்றாரா மந்திரி

**வசனம்**

*பிரதான் வேதம் ஓதிடும் பிராமணர்கள் ஆண்டவனுக்கு செய்ய வேண்டிய நெய்வேத்யம், ஆறுகால பூஜை, இவைகளை சரிவர செய்து வருகின்றார்களா?*

**அமைச்சர்: வசனம்**

**ராமர் : பாட்டு**

அகவிலைக்காரர்கள் படிநிலை குறையாமல்
அளவுடன் அளக்கின்றார்களா மந்திரி

**வசனம்**

*பிரதான் நம் நாட்டிலுள்ள வியாபார பெருமக்கள் குறைபடி, குறை எடை இல்லாமல் சரியான முறையில் வியாபாரம் செய்து வருகின்றார்களா?*

**அமைச்சர் : வசனம்**

**ராமர் : பாட்டு துரிதம்**

மாதம் மும்மாரி மழையது பொழியுதா
மனுநீதி தவறாமல் நீதி வழுகுதா

**பூதலத்தில் புஷ்ப மாரி பொழியுதா**
**பொருந்தும் மந்திரிஇதை அறிந்து சொல்வீரே**

**வசனம்**

*அமைச்சரே நமது நாட்டில் மாதம் மும்மாரி மழை பெய்து மக்கள் நலமுடன் வாழ்ந்து வருகின்றார்களா?*

**அமைச்சர் : வசனம்**

**ராமர் : கவி**

**வேதம் ஓதிடும் வேதியர்க்கோர் மழை**
**நீதி மன்னர் நெறியணர்க்கோர் மழை**
**மாதர் கற்புள்ள மங்கைக்கோர் மழை**

**வசனம்**

*பிரதான் வேதம் ஓதக்கூடிய பிராமணர்கள் கடவுளுக்கு செய்ய வேண்டிய நெய்வேத்தியங்களை முறையாக செய்து ஆண்டவனை வணங்கி வந்தால் அப்பிராமணர்களுக்காக மாதத்தில் ஓர் புண்ணிய மழையும், அரசு புரியும் வேந்தன் சம நீதியுடன் அரசு புரிந்து வந்தால் அம்மன்னனுக்காக மாதத்தில் ஓர் புண்ணிய மழையும், கணவனே தெய்வமென்று நினைந்து கற்பு நிலையில் எவ்வித குற்றமின்றி வாழ்ந்து வரும் பெண்கள் இருப்பார்களேயானால், அவர்களுக்காக மாதத்தில் ஓர் புண்ணிய மழையும் பொய்யுமாம். இந்த*

மூன்று தன்மையும் நடந்தால் வருடத்தில் மூன்று பாவ மழை பெய்யுமாம்.

**அமைச்சர் : வசனம்**

**ராமர் : கவி**

**அரிசி விற்றிடும் அந்தணர்க்கோர் மழை**
**வரிசை தப்பிய மன்னவர்க்கோர் மழை**
**புருஷனை கொன்றிடும் பூவையர்க்கோர் மழை**

**வசனம்**

அரி சிவா என்று சொல்லக்கூடிய மந்திரத்தை தவிர்த்து ஆண்டவனுக்காக கொடுத்த அரிசியை விற்று தன் சொந்த சிலவை செய்யும் பிராமணர்கள் வாழ்ந்தால் அவர்களுக்காக வருடத்தில் ஓர் பாவ மழையும், குடிகளில் இருவர் சச்சரவு செய்து நீதிக்காக அரசனிடத்தில் வந்தால் அவ்வரசனே முறையாகவும் சமநீதியாக விசாரிக்காமல் ஓர பட்சமாக நீதி விசாரனை செய்து வந்தார்களேயானால் அவ்வரசனுக்காக வருடத்தில் ஓர் பாவ மழையும், கணவனால் சம்பாரிக்கப்பட்ட சொத்தை கள்ள புருஷனுக்காக செலவிட்டு தன் சொந்த புருஷனை சோரம் செய்யும் பெண்கள் வாழ்ந்தால் அவர்களுக்காக வருடத்தில் ஓர் பாவ மழையும் இந்த மூன்று செயல்கள் ஒரு நாட்டில் நடக்குமேயானால் அந்த நாட்டில் வருடத்தில் மூன்று பாவ மழை பெய்யும்.

*அப்படி நமது நாட்டில் மாதத்தில் மூன்று புண்ணிய மழை பெய்கிறதா அல்லது வருடத்தில் மூன்று பாவ மழை பெய்கிறதா.*

**அமைச்சர் : வசனம்**

**ராமர் : பாட்டு அடைதாளம்**

**தேச தேசத்து மன்னரெல்லாம்**
**நம்மை தேடி நம்மை நாடி**
**நம்மை தேடிய கைப்பணம்**
**நாடி வருகுதா சொல் சொல் சொல்**

**வசனம்**

*பிரதான் நமக்கு கீழ்படிந்துள்ள சிற்றரசர்கள் நமக்குச் சேர வேண்டிய பகுதியை தாமாகவே கொண்டு வந்து செலுத்தி ரசீது பெற்றுச் செல்கிறார்களா அல்லது கட்டாய வசூல் செய்யப்படுகிறதா.*

**அமைச்சர் : வசனம்**

**ராமர் : கவி**

**முறை செய்து காப்பாற்றும் மன்னவன்**
**மக்கள் இறை என்றே வைக்கப்படும்**

**ராமர் : வசனம்**

*பிரதான் முறையோடு அரசு செய்யும் மன்னவன் நாட்டில் மாதம் மூன்று புண்ணிய மழை பெய்து மக்கள்*

செய்யும் பயிர்த்தொழில் மேன்மை அடையுமாம் நாட்டில் பஞ்சம் ஏற்படாதாம். அதனால்தான் கேட்டேன். அமைச்சரே நான் கேட்ட கேள்விகளுக்கு தகுந்த பதிலை தெரிவித்ததற்கு மிகவும் சந்தோஷம். அந்த புரத்தில் இருக்கும் தம்பி லெட்சுமணனை அழைத்து வருவீர்.

**லெட்சுமணன் : வசனம்**

**ராமர் : விருத்தம் கீர்வாணி**

பிள்ளையில்லா துயரமதை மனதில் எண்ணி
இந்த பேருலகில் இருந்து பலன்தான் என்ன
வள்ளல் என்னும் தசரதற்கு மைந்தனாகி
அவர்மனக் கவலை தீர்த்த பின்னால் ......

தெள்ளியதோர் ரவிகுலம் விளங்கவே தான்
அந்த திங்கள் என்னும் சங்கரர்க்கு தயவும் இல்லை
அல்லி இளஞ்சே ஜானகிக்கு பிள்ளையில்லை
யாரிட்ட சாபமோ அருமைதம்பி லட்சுமணா

**ராமர் : பாட்டு ஆதிதாளம்**

பிள்ளையில்லாத பாக்யம் பெற்றதினால் என்ன சிலாக்கியம்
பெருவதுண்டோடா சொர்க்கம் வருவதுண்டோடா தம்பி
அருமை தம்பி லட்சுமணா

**ராமர் : கவி**

புத்திரன் இல்லையென்றால் புத்திரி
　　என்னும் நரகத்தில் தள்ளுவர்
அத்திறம் என்ன வென்றால்
　　அன்னை தந்தையர்க்கு சொர்க்கம்
புத்திரன் கையால் எள்ளும் நீரும்
　　பொருந்தவே பெற்றால் சத்தியமாம்
இருபத்தோர் தலை முறைக்கும்
　　சொர்க்கம் என்று சாஸ்த்திரம்.

**ராமர் வசனம்**

லட்சுமணா மணமாலை சூடிய மனைவியின் வயிற்றில் புத்திரன் பிறந்து நாம் மறித்து பின்பு, நம்மை நினைந்து வருடம் தோறும் எள்ளும் நீரும் இறைத்து வந்தால் இருபத்தோர் தலைமுறைக்கும் சொர்க்கம் கிடைக்குமாம், அப்படி கிடைக்க கிடைக்குமாம். அப்படி கிடைக்க பெறாவிட்டால் புத்திரி என்று சொல்லக்கூடிய கொடிய நரகத்தில் நம்மை கொண்டுபோய் சேர்க்குமாம், அந்த கொடிய நகரகம்தான் கிடைக்கும் போல் தெரிகிறதே. இதற்கு என்னடா செய்வோம் தம்பி லட்சுமணா!

**ராமர் பாட்டு ஆதி**

**தெள்ளிய ரவிகுலம் அப கீர்த்தியாலே அயன்**
**செய்தானோடா கவம் மெய்தானாடா தம்பி.**

**வசனம்**

தம்பி ஆயிரம் சிரசையும் இரண்டாயிரம் நாவையும் படைத்த ஆதிசேஷனால் அளவிடப்பட்ட முடியாத சூரிய பகவானுக்கு நான்கு மனைவிகள் அவர்கள் சங்கை, பிரபவை, பிகுகி, சாயர்தேவி என்பார்கள் அவர்களில் மூத்த மனைவி சங்கை. கங்கையின் மகன் வைசுதுவன், வைசுதுவன் மகன் இட்சுவாகு, இட்சுவாகு மகன்

கட்டுவாங்கன், கட்டுவாங்கன் மகன் விகுக்கி, விகுக்கி மகன் சுயோதனன், சுயோதனன் மகன் அம்பீரசன், அம்பீரசன் மகன் வசுமனா வசுமனா மகன் மாந்தாதா, மாந்தாதா மகன் திலீபராஜன் திலீபராஜன், மகன் சகரராஜன் சகரராஜன், மகன் அசுரராஜன், அசுரராஜன் மகன் அசமஞ்சன், அசமஞ்சன் மகன் அச்சுபதி அச்சுபதி மகன் பிர்மோதி, பிர்மோதி மகன் மித்திரன் மித்திரன் மகன் மித்திரசேனன், மித்திரசேனன் மகன் உபணாட்சுதுவன், உபணாட்சுதுவன் மகன் வருணாட்சுதுவன், வருணாட்சுதுவன் மகன் திரியதனு, திரியதனு மகன் திருச்சங்கு, திருச்சங்கு மகன் அரிச்சந்திரன், அரிச்சந்திரன் மகன் லோகிதாசன், லோகிதாசன் மகன் விஜயன், விஜயன் மகன் துந்தன், துந்தன் மகன் காரூகன், காரூகன் மகன் உத்திரமேனன், உத்திரமேனன் மகன் சாம்புவாட்சுதுவன், சாம்புவாட்சுதுவன் மகன் பகலவன், பகலவன் மகன் உதாரராஜன், உதாரராஜன் மகன் குலுங்கன், குலுங்கன் மகன் சிந்து தீபன், சிந்துதீபன் மகன் அயுதா பரீதன், அயுதாபரீதன் மகன் முகுந்தன், முகுந்தன் மகன் ரதாட்சதவன், ரதாட்சுதுவன் மகன் பிரகதாசுவன், பிரகதாசுவன் மகன் அம்பீரசன், அம்பீரசன் மகன் அதிரதன், அதிரதன் மகன் தசரதன், தசரதன் மகன் ராமன், லெட்சுமணன். பரதன், சத்துருக்கன் என நாம் பிறந்தோம். (இடையில் ஒரு தாள் இல்லை)

**ராமர் பாட்டு ஆகி**

**வணங்கின எளியோர்க்கு வழக்குரை சொன்மனமடா!**
**வகை இதுவோ! தெய்வ பகை இதுவோ தம்பி.**

**ராமர் கவி**

**இருவர் வழக்கை எடுத்துரைக்க மாட்டாமல்**
**ஒருவர் முகமே பார்த்து உரைப்பானேயானால்**
**வறுமை மேலிட்டு வாய்மை இழந்து**
**சிறு மழலை இழந்து பெண்டீரன்றி நாசமாய்**
**போய்விடுவார்களாம்.**

**வசனம்**

அருமை தம்பி லட்சுமணா குடிகளில் இருவர் சச்சரவு செய்து அரசனிடத்து நீதிக் கேட்க வந்தால் அவ்வரசனோ சரிசமமாக செங்கோல் வளையாது, நடுவு நிலையோடு விசாரனை செய்து நேர்மை நீதி சொல்லாமல், ஒருவனுக்கு சாதகமாகவும், மற்றவனுக்கு பாதகமாகவும் நீதி சொல்லும் மன்னவன் வாழ்ந்தால் அன்னவனோ முடி இழந்து பிள்ளை பெண்டிர் இழந்து வறுமை மேலிட்டு நாசமாய் போவார்கள் என்று சாஸ்திரம் கூறுகிறது. அப்படி நாம் யாருக்காவது ஓரப்பட்சமாய் நீதி வழங்கினோமா நமக்கு இப்படி ஆகி விட்டதே தம்பி.

**ராமர் பாட்டு ஆதி**

**தேடித்தேடி வைத்து திரவியம் இருந்து என்ன**
**செல்வம் இல்லாதவர்க்கு சொர்க்கமே இல்லேடா**
**அருமை தம்பி லட்சுமணா.**

**ராமர் கவி**

**பொன் உடையரேனும் புகழ் உடையரேனும் மற்று**
**என்னுடையரும் உடையரே**
**இன்னடி சீரிழக்கும் தாமரை கைநாறும்**
**இங்கு இல்லாதவர் மாந்தர்.**

**வசனம்**

*ஆஸ்தியிலே உயர்ந்தவராக இருந்தாலும் பெரும் கீர்த்தியிலே உயர்ந்தவராக இருந்தாலும் சரிதான். ஒரு பயனும் இல்லை தாமரையில் வீற்றிருக்கும் சரஸ்வதியின் சிவந்த பொற் கரங்களைப் போல் ஒரு மழலை இருந்தால் அவனே பாக்யசாலி அதை பெறாதவன் இவ்வுலகிலே மனிதனாக பிறந்து என்னடா பலன் இருக்கிறது.*

**ராமர் பாட்டு ஆதி**

**பணங்களைத் தேட நெல்லில் பதரை கலந்தோமடா**
**பாவம் இதுவோ எவர் சாபம் இதுவோ தம்பி.**

**வசனம்**

*லெட்சுமணா நாம் பணம் சம்பாரிக்க தானியத்தின் பதரை கலந்து விற்றோமா நமக்கும் இப்படி ஆகிவிட்டதா*

*யார் குடியை கெடுத்தோம், யாருக்கு என்ன தீங்கு செய்தோம் நமக்கு ஓர் குழந்தையில்லாமல் போய்விட்டதே தம்பி*

**ராமர் பாட்டு ஆதி**

**எவரிட்ட சாபமோ எனக்கு பலித்ததடா**
**என்னுடன் பிறந்தீரே கண் போல வளர்ந்தீரே**
**ஜென்ம வருடன் என்று தேசத்தோர் என்னை ஏச**
**ஜென்மம் எடுத்தோமடா தசரதன் வயிற்றிலே**
**தேடி தேடி வைத்த திரவியம் இருந்தென்ன**
**செல்வம் இல்லாதவர்க்கு சொர்க்கமே இல்லையடா.**

**ராமர் கவி**

**கண்ணிற்கினிய மணி கற்றோன் சபைக்கு மணி**
**விண்ணிற்கினிய மணி வெய்யோனாம் வண்ணலரும்**
**சாந்த மனையாள் சயனித்திருக்கும் மணி.**

**ராமர் வசனம்**

*லெட்பனா கண்ணின் நடுவில் ஒரு சிறு கருமை புள்ளி இருக்கிறதே அதுதாம் நாம் பார்ப்பதற்கு ஒளியை தருவது. அதுவே கண்ணிற்கு மணியாகும். விண் என்றும் சொல்லப்பட்ட ஆகாயத்தில் எத்தனை ஆயிரக் கணக்கான நட்சத்திரங்கள் இருந்த போதிலும் சந்திரனே உலகுக்கு ஒளியை தருவது அதுதான் ஆகாயத்திற்கு மணியாகும்..*

நல்ல விலாசம் பொருந்திய ஓர் அரண்மனையின் ஓர் ஆண் மகன் பிறந்து ஆடி ஓடி விளையாடினால் அந்த மனைக்கு ஆண் புத்திரனே மணியாகும். நமது விலாசம் பொருந்திய அரண்மனையில் ஓர் மணி இல்லாமல் போய்விட்டதே லெட்பணா.

**ராமர் பாட்டு ரூபகம்**

**ஓடி விளையாடவே உத்தம ராமர்க்கு**
**புத்திரன் என்றுமே ஓடி விளையாடவே, ஆடவே ஆடவே,**
**கூடிய நால்வர்க்கும் குழந்தை கவலையே,**
**நாடியே புத்ர பாக்யம் நமக்கொன்றும் இல்லையே. (ஓடி)**

**தேடிய தவத்தால் செல்வனும் இல்லையே செல்வனும்**
**இல்லையே வந்ததே தொல்லையே (ஓடி )**

**அகவல்**

நமது அரண்மனையில் ஓர் புத்திரன் பிறந்து நம்மை பார்த்து அம்மா, அப்பா என்று அழைத்திட ஓர் புத்திரன் இல்லையப்பா, இதையெல்லாம் நினைக்கும் போது என் மனமோ மிகவும் சஞ்சலமாக இருக்கிறது. இதற்கு நீர்தான் ஏதாவது முகாந்திரம் தெரிவிக்க வேண்டும் தம்பி.

**லெட்சுமணன் வசனம்**

**ராமர் வசனம்**

லெட்பணா தாடகையை சம்மாரம் செய்ததும், ராவண சம்மாரம் செய்ததும் நானும் நீயும் தம்பிகளாகிய

பரதன் சத்துருக்கன் அயோத்தில்தானே இருந்தார்கள். அவர்களுக்காவது குழந்தை இருக்கலாம் அல்லவா? பாவங்களை செய்தவர்கள் நாம் தானே அவர்களா செய்தார்கள், அதற்கு என்ன தெரிவிக்கிறாய்.

**லெட்சுமணன் வசனம்**

**ராமர் பாட்டு ஆதீதி**

**எனக்கொரு விதமான மயக்கமோ வருகுதடா**
**கணக்கற்ற சோபங்கள் பிணக்காக தோணுதடா**
**காரணமோ இது நானறியேன் தம்பி.**

**ராமர் விருத்தம் கேதாரம்**

**புத்திரன் இல்லையென்று புலம்பியே**
**வருத்தத்தாலே மெத்தவே அயர்ந்து நித்திரை விழிகளும்**
**சோர்வதாலே**
**சித்திர கூட மண்டபத்தில் தீர்க்கமாய் நித்திரை செய்து**
**சற்று நேரத்தில வாரேன் சகலரும் இருந்திடீரே.**

**வசனம்**

அருமை தம்பி லெட்சுமணா புத்திரன் இல்லாத சோகத்தால் அயர்ந்து நித்திரை வருகிறது, சற்று நேரம் நமது சப்ரகூட மண்டபத்தில் நித்திரை செய்து வருகிறேன். அதுவரையில் என் அருகாமையில் நின்று யாராவது என்னை நாடி வந்தால் அவர்களை வரவேற்று உபசரிக்க வேண்டும் தம்பி.

**லெட்சுமணன் வசனம்**

**ராமர் விருத்தம் கேதாரம்**

*சொற்பனம் கண்டேனப்பா துடிதுடித்தெழுந்து நின்றேன் அற்புத தம்பிமாரே அருகினில் வாரும் சொல்வேன் கற்புள்ள ஜானகியை காட்டினில் ஓட்ட கண்டேன் இப்படியாக கண்டேன் இன்னதன்று அறியேன்டா.*

**ராமர் பாட்டு ரூபகம்**

**நேசமானத் தம்பி மார்களே**
**நானொரு மாயக்கனவு கண்டேன்**
**பைங்கொடி சீதையாள்**
**ஐந்தொரு மாதமாய் கெற்பமுண்டாகக் கண்டேன் (நேச)**

**பூதலம் புகழும் ஐய்யோத்தி தேசத்தை**
**நீதியுடன் அரசாண்டு வருகையில்**
**ஆண்டு வருகையில் சீதையும் நாணம்**
**அருந்தவம் செய்திடவும் (நேச)**

**விந்தையாய் காவலர் தம்மை கண்டய்யோத்தி**
**தப்பாமல் சோதித்து வருகவும்**
**சோதனை செய்கையில் பாதக ஓர் வண்ணான்**
**சூட்சமாய் சொல்லிடவும் பூட்சணமாகிய**
**சீதையை கொண்டு போய்**
**பொல்லாத காட்டினில் சொல்லாமல் ஓட்டவும் (நேச)**

**வசனம்**

அருமை தம்பி லெட்பணா நான் புத்திரன் இல்லாது அயர்ந்து நித்திரை செய்யும்போது ஓர் சொற்பனம் கண்டுள்ளேன். அதாவது சீதை ஐந்து மாதம் கெற்பமாகவும் அன்னவளுக்கு சீமந்தம் செய்து இரண்டு வரங்கள் கொடுக்கவும் கனவு கண்டேன். பிறகு நான் நமது தலையாரிமார்களை வரவழைத்து நமது நாட்டில் நகர் சோதனை செய்யவும் தெரிவிக்க அவர்கள் வீதிகளில் சோதனை செய்து வந்தார்கள். எல்லா வீதிகளிலும் ராமர் வாழ்க வாழ்க என்று போற்றி வந்தார்கள் கடைசி வீதி ஏகாலியான ஏழை குடிமகன் வீதியில் ஏதோ சப்தம் கேட்க காவலர்கள் பதுங்கி கவனித்தார்களாம். அங்கே ஏகாலியின் மனைவியை அடிக்க அவள் பிணங்கி தன் தாய்வீடு தனிமையில் சென்று விட்டாள். அவளை திரும்பவும் அழைத்து வந்து குடும்பம் செய் என்று அவனின் தாயானவள் கேட்டாள்.

அம்மா கணவன் அடித்தற்காக மனைவியானவள் கோபித்து தனிமையில் சென்றிருக்கிறாள். அவளை இனி அழைக்கமாட்டேன் என்று தடுத்து மறுத்துவிட்டான். மகனே சிறையிருந்த சீதையை சிறைமீட்க வந்து வாழும் ஸ்ரீராமர் குலத்தை விட உன் குலம் உயர்ந்ததா என்று அவனின் தாய் கேழ்க்க (கேட்க) அவனோ என் குலம்

வீரபத்திர குலம் அவர் குலமோ ஆரிய குலம், அவர்கள் குலத்திற்கு அடுக்கும் என் குலத்திற்கு அடுக்காது என்று சொல்ல அதை கேட்ட காவலர்கள் என்னிடம் தெரிவிக்க அதனால் சீதையை கானகம் ஓட்டவும் நான் அஸ்பமேதியாகம் செய்யவும் காட்டிலே சீதைக்கு பாலர்கள் பிறந்து அவர்களுக்கும் நமக்கும் போர் மூண்டு நால்வரும் மடியவும் பிறகு யாரே ஓர் தவசியினால் உயிர் பெறவும் கனவு கண்டேன். இதன் விபரம் என்ன வென்று யார் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

**லெட்சுமணன் வசனம்**

**ராமர் கவி**

**வழிநடை அசதியாலும மாதர் சம்போகத்தாலும்**
**பழிசெய்யும் பித்தத்தாலும் பராக்கிரம விரத்தாலும்**
**அழிவிலா நினைவை பற்றி அலட்டியே சொற்பனம் காணும்.**

**வசனம்**

லெட்பணா வெகு தூரம் நடந்து களைப்புற்று உறங்கினால் இப்படி சொற்பனம் காணுமாம், மனைவியுடன் சரச சல்லாபமாக இன்புற்று உறங்கினாலும் இப்படியும் காணும், வயது முதிர்ந்து பித்தமானது அதிகரித்து சோர்ந்து நித்திரை செய்தாலும் இப்படியும் காணுமாம், நாம் செய்யும் பயிர்த்தொழிலில் பலன் கிடைக்குமா? என்ற கவலையுடன் நித்திரை செய்தாலும்

இப்படியும் காணுமாம், ஆனால் பிள்ளையில்லா துயரத்துடன் நித்திரை செய்தேன், இப்பேற்பட்ட சொற்பனம் கண்டுள்ளேன் இதன் பலாப்பலனை எப்படி தெரிந்து கொள்ளலாம் தம்பி.

**லெட்சுமணன் வசனம்**

**ராமர் வசனம்**

அமைச்சரே அப்படி வதிஷ்ட மகாமுனிவர் வந்திருந்தால் தெற்பாாசனமிட்டு வெண்சாமறை வீசுங்கள் ,இதோ வருகிறேன்.

**பாட்டு ஆதி**

**மாதவ குலக்குருவை பணிந்தேன்**
**பாதமலர் நான் பணிந்தேன்**
**பூதலம் தனினில் வர புண்ணியங்கள் என்ன செய்தோம்.**
**சருணம் சருணம் முனிநாதா**
**கருணையாய் என்னை வைத்து கார்த்து ரெட்சிக்க வேண்டும்**
**வேத வேங்கடகிரி வாசா விமலர்க்கு அமரலான**
**வதிஷ்ட மகாமுனியே போற்றி போற்றி**
**முனிநாதா பொற்பாத கமலத்தை எப்போது மறவேன்.**

**வசனம்**

சுவாமி எங்கள் குலத்திற்கெல்லாம் சற்குருவாக விளங்கும் ஐய்யனே தாங்களின் பொற்பாதங்களுக்கு

எத்தனையோ வாசனை திரவியங்களை வைத்து வணங்கலாம் அவைகள் வாடக்கூடியது என்று எண்ணி எனது இருகரம் தூக்கி சிரம் தாழ்த்தி கோடி கோடி நமஸ்காரம்.

**வதிஷ்டமாமுனி வசனம்**

**ராமர் விருத்தம் காப்பி**

சொற்பனம் வதிஷ்டரே நான் சொல்லுவேன் சீதையற்கு
அப்போது ஐந்து மாதம் ஆகவும் வயிற்றில் கெற்பம் கற்புள்ள
ஜானகியை கானகம் ஓட்டக் கண்டேன் இப்படியாக கண்டேன்
இன்னதென்றறியேன் சுவாமி.

**பாட்டு ருபகம்**

சுவாமி என்ன மாயமோ கனவின் நேர்மையறிகுலேன்
சுவாமி குருபர சஞ்சலமாகவே சப்ரக் கூட மதில்
சயனித்திருக்கவும் (சுவாமி)

**சுருள்**

நாடுதனை சோதிக்க காவலோரை அனுப்பி வைக்க
ஏடா கூடமாக இகழ்ச்சி சொல்ல வண்ணான்
ஏங்கியே காவலர் என்னிடம் சொல்லவும். (சுவாமி)

பூட்சணமாகிய சீதையை கொண்டுபோய் பொல்லாத
காட்டினில் சொல்லாமல் ஓட்டவும் (சுவாமி)

**வசனம்**

சுவாமி பிள்ளையில்லாத துயரத்தில் நான் சோகமாகி எனது சப்ரக்கூட மதில் சற்று நேரம் நித்திரை செய்தேன். அப்போது ஓர் சொற்பனம் கண்டேன், அதாவது என் மனைவியோ ஐந்து மாதம் கெற்பமாகவும் எனது நாட்டை நகர் சோதனை செய்யவும் சோதனையில் ஓர் வண்ணான் என் மனைவியின் மீது இழிவான வார்த்தை கூற அதனால் அவளை கானகம் விடவும் கண்டேன். பிறகு நாட்டில் அஸ்பமேதியாகம் செய்து 56 தேசமும் திக்கு விஜயம் செய்ய, காட்டிலே சீதைக்கு பிறந்த குழந்தைகளால் போர் மூண்டு நாங்கள் நால்வரும் மடியவும், பிறகு தாங்களை போல் ஓர் முனிவரால் உயிர் பெற்று அய்யோத்தி அடையவும் கனவு கண்டேன். இதன் விபரத்தை அறியவே தாங்களை அழைப்பித்தேன் சுவாமி.

**வதிஷ்டாமுனிவர் வசனம்**

**ராமர்: விருத்தம் காம்போதி**

**மருந்து போல் கிடைத்த தம்பி லெட்பணா சொல்லை கேளீர்**
**மாது வருவது வயிற்றில் கெற்பம்**
**மாதம் ஐந்தான சேதி குருமுனி சொல் படிக்கு**
**கோசலை இடத்தில் சென்று**
**சரியது நிசமோ வென்று சல்தியில அறிந்து வாராய்.**

**வசனம்**

லெட்பனா குருமகானின் சொல்பிரகாரம் நமது தாய்மார்களைக் கண்டு சீத்தா ஐந்து மாதம் கெற்பம் உண்மையா பொய்யா வென்று அறிந்து வருவாய்.

**லெட்சுமணன் வசனம்**

**ராமர் விருத்தம் காப்பி**

வேதியர் புகழுகின்ற வேதாந்த முனியே நாதா
சீதை நாயகிக் குதானும் சீமந்தம் செய்ய வேண்டும்
நீதியா தம்ம சாஸ்திரம் நெறிகளும் பிசகிடாமல் ஓதியே
பொருத்தம் பார்த்தும் உண்மையை உரைப்பீர் ஐய்யா.

**ராமர் பாட்டு ஆதி**

சுபதினம் பார்த்தருள் வேண்டுமய்யா
சீதைக்கு சீமந்தம் செய்ய வேண்டுமே அய்யா (சுப)

**வசனம்**

சுவாமி தாய்மார்களை கண்ட போது சீத்தா ஐந்து மாதம் கெற்பம் உண்மைதானாம் அதனால் அன்னவருக்கு நல்ல வாரம் நல்லநாள், நல்ல வேளை பார்த்து சீமந்தம் செய்வதற்கு நாள் அமைக்க வேண்டும் சுவாமி.

**வஷிஷ்டமுனிவர் வசனம்**

**ராமர் பாட்டு ஆதி**

**என் பெயர் ராமச்சந்திரன் என்று உமக்கு தெரியும்**
**எந்தன் மாது சீதையென்று என்றதில் குறியுமய்யா (சுப)**

**வசனம்**

*சுவாமி எனக்கும் சீதைக்கும் எத்தனையோ பெயர் நாமங்கள் இருந்த போதிலும் சீத்தா, ராமா என்ற பெயர்களுக்கு பொருத்தம் அமைக்க வேண்டும்,*

**வஷிஷ்டமுனிவர் வசனம்**

**ராமர் பாட்டு ஆதி தாளம்**

**சரிகை கிரிகையோக ஞானங்களும் பெறலாம்**
**சாலோக சாரூப சாயுச்ச பதவியை அடையலாம்.**

**வசனம்**

*சுவாமி சரிகை, கிரிகை போகம் என்றுச் சொல்லப் பட்ட நான்காம் பதவியை அடையலாம், அதனால் தான் தெரிவித்தேன்.*

**வஷிஷ்டமுனிவர் வசனம்**

**ராமர் வசனம்**

*அமைச்சரே அந்தபுரம் சென்று சீதையை அலங்காரம், செய்து முத்துச் சிவிகையில் வைத்து மேள*

*வாத்யங்கள் முழங்க சபைக்கு அழைத்து வாருங்கள்.*

**சீதை வசனம்**

**ராமர் பாட்டு ஆதி**

**வசந்த முல்லை போலே வந்து அசைந்து ஆடும் ஜானகி**
**மாய மெல்லாம் நானறிவனே வா, வா, ஜானகி (வச)**

**இசையினில் மயங்கியே இன்புறும் அன்பே வா**
**ஈடில்லா உன்னையே என் மனம் நாடுதே (வச)**

மந்திர கண்ணாலே தந்திர வலை வீசும்
சுந்திர அபஷேகம் நான் அறியாமலே
**இந்திரன் சபைதனில் வந்தொளிர் வீசிடும்**
ஈடில் உன்னையே என் மனம் நாடுதே (வச)

**வசனம்**

*கண்ணே ஜானகி நீயோ, ஐந்து மாதம் கெற்பத்தை மறைத்து என்னிடமே சொல்லவில்லை, ஆனால் என் தாய்மார்கள் மூலமாக அறிந்தேன், இப்போது உனக்கு சீமந்த கல்யாணம் நடை பெற உள்ளது, என் அருகாமையில் அமருவாய்.*

**சீதை வசனம்**

**ராமர் விருத்தம் அட்டணா**

சிந்தையும் மகிழ்ந்து ராமர் சீதைதான் வடுவை பார்த்து
சந்தோஷமாகவேதான் தைய்யலை மடிமேல் வைத்து
சுந்திரமுள்ள மாது தோகைதன் கூந்தல் கீரி கொந்தள
தோட்டினாளே கோகில மணியே கண்ணே.

**ராமர் பாட்டு ரூபகம்**

மானே குண ரஞ்சிதமான செந்தேனே
மன்னன் ஜனகரன் பெண்ணே கண்ணே கண்ணே ஜானகி
(மா)

தானேயாகமா சாஸ்திரமாகவே
சகல வேத புராண நல்நூல்களும் தேனே பார்த்து தெறிந்தேன்
அஷ்டாங்கமும் தெளிந்த ஜனகரன் செல்வியரே பெண்ணே
(மானே)

**வசனம்**

*கண்ணே ஜானகி நான்கு வேதம், ஆறுசாஸ்திரம் பதிநெட்டு புராணம், இருபத்து எட்டு யாகம், முப்பத்திரண்டு தர்மம், அறுபத்து நான்கு கல்விக்கானம், தொண்ணுற்றி ஆறு தத்துவம் இப்படிக்கு மனுவிக்யானங்களை கற்றுணர்ந்த ஜானகி நான் சின்ன வயதில் உன்னுடைய அழகையும் அறிவு திறமைகளை கேள்வி பட்டிருந்தேன்.*

**ராமர் பாட்டு ரூபகம்**

**சின்ன வயதினில் உன்னையே யான்**
**மணம் செய்திடவே மனம் நாடி**
**துன்னும் சடைமுடி தரித்த கோசிகன்**
**தன்னுடனே யானும் கூடி**
**என்னுடன் பாணத்தால் அடித்தேன் தாடகையை**
**ஏடுகிழிந்தவள் பாடயெ முடிந்தானே (மானே)**

**வசனம்**

கண்மணி எனது சிறுவயதில் விஸ்வாமித்திரரின் யாகத்தை இடையூறு செய்த தாடகையை சம்மாரம் செய்து எனது பாதம் ஓர் கல்லின் மீது பட அக்கல்லோ பெண் ரூபமாக எழுந்ததது. ஆச்சரியத்தோடு விஸ்வமித்திரரை பார்த்தேன். அவரோ அவள் பெயர் அகலிகையென்றும் பத்தாவின் சாபத்தால் கல்லானவள், உன் பாதம் பட்டவுடன் பெண் ரூபமாகி மோட்சம் அடைய போகிறாள் என்றார்.

**சீதை-வசனம்**

**ராமர் வசனம்**

ஜானகி கௌதம மகா ரிஷியின் மனைவிதான் அகலிகை அவளோ எண்னான்கு முப்பத்தி ரெண்டு அழுகுடையவள். தேவேந்திரனே எப்படியும் ஓர் நாள் அவளை ஆலிங்கனம் செய்ய வேண்டும் என்று எதிர்

பார்த்திருந்தான். கௌதம் ரிஷியானவர் தினந்தோறும் சாம கோழி கூவியதும் கங்கை சென்று நீராடி பூஜை செய்வது வழக்கம். ஓர் நாள் இரவு தேவ கோமான் கோழியாக ரூபமெடுத்து வழக்கமான கோழி கூவுவதற்குமுன் கூவுகின்றான். முனிவரோ விடிந்து விட்டது என்று எண்ணி கங்கை சென்றார். அச்சமயம் தேவேந்திரன் முனிவராக ரூபமெடுத்து குடிசையில் நுழைந்து அகலிகையின் குடிசையில் நுழைந்து அகலிகையின் கற்பை சூறையாடுகிறான். கங்கையை அடைந்த முனிவருக்கு சந்தேகம் அடைகிறது. காரணம் கங்கையோ உறங்குகிறது. செடிகொடிகள் அசையவில்லை, பறவைகளும் ஒலியையும் காணவில்லை, உடனே தன் குடிசையை நோக்கி வருகிறார். இவரின் நடையோசையை கேட்ட தேவகோமான் எலியாக ரூபங்கொண்டு வெளியில் வர முனிவரோ பூனையாக ரூபங்கொண்டு எலியை கல்விக் கொள்கிறார். தேவேந்திரன் சுய ரூபமானான் அடே தேவேந்திரா ஓர் முனிவரின் பத்தினி என்று பாராமல் ஓர் யோனிக்கு ஆசைபட்டு இக்காரியத்தை செய்ததால் உன் உடடெல்லாம் ஆயிரம் யோனிகளாக போக வேண்டும் என்று சாபமிட்டார்.

பிறகு மனைவியை பார்த்து பத்தாவின் குணாதிசியங்கள் இப்படித்தான் இருக்கும் என்று அறியாமல் அன்னியனால் கற்பிழந்து விட்டாய் இனி என்

மனைவி இல்லை நீ கல்லாக போவாய் என்று சாபமிட்டார். அன்னவளோ தன் பத்தாவின் பாதத்தை பிடித்து நான் அறியாமல் செய்த தவறை பொருக்க வேண்டும். எனக்கு இனி பாவ விமோட்சணம் இல்லையா என்று கெஞ்சினாள். முனிவரோ அன்னவளிடம் காம விஷ்ணு பூமிபாரம் தீர்க்க ராமாவதாரம் எடுப்பார் அப்படி எடுத்து இக்கானகம் வந்து அவர் பாதம் பட்டால் உனக்கு விமோட்சணம் கிடைக்கும் என்றார். அதுவே நான் அகலிகைக்கு சாபம் நீக்கி அன்னவருக்கு மோட்சம் கொடுத்தேன்.

பிறகு தேவகோமான் நானோ அறிவிழந்து செய்த இக்காரியத்தை பொருக்க வேண்டும் சுவாமி மேலும் தேவ உலகத்திற்கு தலைவன் இந்நிலையில் தேவலோகம் செல்ல முடியுமா? ம என்னை பார்த்து இழிவாக பேசுவார்களே என்ன செய்வேன் என்று மன்றாடி வணங்கி நின்றான் முனிவரோ தேவேந்திரா இந்த யோனிகள் உனது கண்களுக்கு மட்டுந்தான் தெரியும் பிற கண்களுக்கு தெரியாது என்று கூறி அனுப்பி விட்டார். இதுவே அகலிகையின் சாபம் ஜானகி.

**ராமர் பாட்டு - ரூபகம்**

**அந்த வில்லை வளைத்துன்னை கல்யாணம் செய்தேன்**
**அப்போ மகிழ்ந்தது போலே நான் இப்போ மகிழ்ந்தேன்**
**உன் மேலே.**

**உந்தனுக்கு தேவையான வரங்களை**
**எந்தன் முன்னாலே சொன்னாலே தந்திடுவேன்**
**அதற்கொன்றும் தடையில்லை சற்குணமே எந்தன்**
**பொற்கிளியே கண்ணே. (மானே)**

**வசனம்**

ஜானகி அகலிகைக்கு மோட்சம் கொடுத்து நானும் என் அருமை தம்பி லெட்சுமணன், குருவாகிய விஸ்வாமித்திரர் மிதுலை நோக்கி வருகிறோம். அப்போது விஸ்வாமித்திரர் ஏ..........ராமா சீதைக்கு சுயவரம் நடக்கிறது அங்கேதான் செல்கிறோம் என்றார். எங்களது ரதமானது உன் அரண்மனை நெருங்கியது; அங்கே கல, கல, என்று வளையலோசை கேட்கிறது, நான் உற்று நோக்கினேன், நீயும் உன் தோழிகளும் விளையாடி கொண்டிருந்தீர்கள், எனது கண்களும்உனது கண்களும் சந்திக்கிறது. உன்னுடைய முக தோற்றத்தை எப்படி வர்ணிப்பது என்று திகைத்து விட்டேன். கண்ணே அது எப்படியென்றால் கார்மேகம் போல் கூந்தலும் செவ்விள போல் கூந்தலும செவ்விள நீர்போல சிரசும் மூன்றாம் பிறையை போல் நெற்றியும் முல்லை அரும்பை போல் புருவமும் ரெசகுண்டை போல் விழிகளும் குமளம் பழம் போன்ற தாள்வாயும் வள்ளல் இலையை போன்ற இரு காதுகளும் வலம்புரி சங்குபோல் உன்மூக்கும் பச்சரிசியை

போன்ற பற்களும் புஸ்தகம் விரித்தார் போல் உன் மார்பும் ஆலிலை போல் வயிறும் ஆற்றுச்சுழலை போல் தொப்புளும் உடுக்கையை போன்ற இடையும் சிலைவிரால் போல் இரு துடைகளும் பந்து போன்ற குதியும் ஆலம் விழுதுபோன்று இரு கெண்டை காலும் ஆதிசேஷம் படைத்தார்போல் பாதங்களும் திப்பிலிக்கயை போல் விரல்களும் முத்து பதிந்தது போல் நகங்களும்.

இப்படிக்கு முப்பத்திரெண்டு லெட்சணம் பொருந்திய ஜானகி அன்று அறுபத்தி நான்காயிரம் மல்லர்கள் புரட்ட முடியாத அந்த சிவதனுசு வில்லை வளைத்து மாலையிட்டபோது நான் அடைந்த சந்தோஷத்திற்கு அளவே இல்லை. அதைவிட இப்போது தான் உன் மீது அதிக சந்தோஷம் காரணம் எங்கே என்குலம் என்னோடு அழிந்து விடுமோ என்று கவலை கொண்டிருந்தேன்; நீயோ தற்போது ஐந்து மாதம் கெற்பம் ஆனதால் உனக்கு தேவையான வரத்தை கேள் தருகிறேன் ஜானகி.

**பாட்டு-அடைதாளம்**

**என்னவரம் வேண்டுமடி அந்த வரம் உந்தனுக்கு**
**சந்தோஷமாக கேளடி ஜனகன் கண்ணே சந்தோஷமாக கேளடி**

**ராமர் வசனம் :**

ஜானகி பெண்களுக்கு பருவங்கள் நான்கு, அவைகள் பாலைபருவம், தருணை பருவம், பிரவிடை பருவம், விருத்தை பருவம்.

பாலைபருவம் என்றால் பிறந்தது முதல் பனிரெண்டு வயது வரை, அவர்களுக்குள் தேவையை பெற்றோர்கள் செய்து கொடுப்பார்கள், பனிரெண்டு வயது முதல் முப்பத்திரண்டு வயதிற்கு உட்பட்ட பெண்கள் தருணை பருவம், அவர்களுடைய தேவையை பூர்த்தி செய்வது கணவன்மார்கள், முப்பத்திரண்டு வயதுக்குமேல் ஐம்பத்தி ஐந்து வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிறவடை (பிரவிடை) பெண்கள் அதாவது தாய்பருவம். அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வது பெற்ற பிள்ளைகள், ஐம்பத்தி ஐந்து வயதுக்கு மேற்பட்டவர்கள் தள்ளாதவர்கள், அவர்கள் யாரிடமோ எதையும் வாங்கிக் கொள்ளலாம் குற்றம் இல்லையாம்; ஆனதால் நீயோ தருனை(ணை) பருவம், உன்னுடைய தேவைகளை பூர்த்தி செய்வது என்னுடைய கடமையாகும். ஆனதால் உனக்கு தேவையான வரங்களை கேள் தருகின்றேன் ஜானகி.

**சீதை-வசனம்**

**ராமர் பாட்டு அடைதாளம்**

**ஜானகியே பெண்ணே மணியே**

**ஜனகன் வளர்த்த ஜானகியே பெண்ணே மணியே**

**மான் என்னும் வடிவுடைய மங்கையே**
**நீ கேட்ட வரம் நானுனக்கு தடை சொல்வேனோ**
**அடியே கண்ணே நானுனக்கு தடை சொல்வேனோ.**
**என்னை போல புத்திர பாக்கியம்**
**ஏந்திழையே கேட்டாயொடி**
**சொன்னது போல் நானும் தாரேன்**
**சந்தரமே இன்னும் கேளாய்.**

**ராமர் வசனம்**

*ஜானகி மன்னவனுக்கேற்ற மனைவி என்பதை நிருபித்து விட்டாய். என் குலம் விளங்க ஓர் ஆண் புத்திர வரம் கேட்டு கொண்டாய் அப்படியே உனக்கு குழந்தை வரம் அளித்துள்ளேன். இன்னும் ஒரு வரம் கேட்டுக் கொள்வாய்.*

**சீதை-வசனம்**

**ராமர் கவி**

**மறையோர் மங்கை வரம் மூன்று**
**அரசர்குல மங்கை வரம் இரண்டும்**
**புலை வைசியர் வரம் ஒன்று அதுவே நீசர்க்கு**

**வசனம்**

*சீத்தா மறையோர் என்ற பிராமண பெண்மணிகள் கெற்பிணிகளாக இருந்தால் மூன்று வரங்கள் கேட்டு கொள்ளுவார்களாம். அதாவது குழந்தை வரம் ஒன்றும்,*

ஆபரண அணிகலன்கள் இரண்டு. நல்ல போஜனம் மூன்று வரங்கள் கேட்டு கொள்ளுவார்களாம்.

அரச குல பெண்மணிகள் கெற்பணிகளாக இருந்தால் இரண்டு வரங்கள் கேட்பார்களாம். அதாவது குழந்தைவரம் ஒன்றும் அணிகலன்கள் வரம் ஒன்றும் ஆக இரண்டு வரங்கள் கேட்பார்களாம்.

புலை என்ற நீச பெண்கள் கெற்பிணிகளாக இருந்தால் என்றும் மாமிசத்தோடு உணவு வகைகள் கேட்பார்களாம். செட்டியார் பெண்கள் கெற்பணிகளாக இருந்தால் கணக்கு தவராத ஓர் ஆண் புத்திர வரம் ஒன்று கேட்பார்களாம். நீயோ அரச குலத்தை சேர்ந்தவள் முறைபடி இன்னும் ஓர் வரம் கேட்டுக்கொள்வாய் கண்ணே.

**சீதை பாட்டு வசனம்**

**ராமர் பாட்டு ஆதி**

**தூரச் செல்லடி துஷ்டி அறிவில்லாத மட்டி அப்புறம்**
**போடி எட்டி தூரச் செல்லடி செல்லடி செல்லடி**
**முன்னாளில் உன்னாலே பட்ட துன்பங்களல்லாம்**
**இன்னமும் தீரவில்லை எட்டி அப்புறம் போடி (தூர)**

**மாரீசன் மானாக வர மாது நீ ஆசை பட**
**சீத்தா லெட்பணா என்று சிதறியே மானும் விழ**
**தென்னிலங்கை ராவணனால் சிறையிருந்தாயேதுஷ்டி (தூர)**

**ராமர் வசனம்**

அடி பாதகி முன்னாளில் கைகேசியின் வரத்தின் பிரகாரம் கானகத்தில் பஞ்சவடியில் குடியிருந்தபோது ராவணனால் ஏவபட்ட மாரீசன் மான் ரூபமாக வந்து விளையாட நீயோ அந்த மானை பிடித்து விளாட வேண்டும் என்று ஆசைபட்டாய் நானோ அந்த மான் ஏதோ பொய்மான் போல் தெரிகிறது, எத்தனையோ மான்கள் இருக்கும் இக்கானகத்தில் வேறு மான் பிடித்து தருகிறேன் என்று தெரிவித்தேன், நீயோ பிடிவாதத்தோடு அம்மான்தான் வேண்டும் என்று கேட்டாய்; நான் தம்பியாகிய லெட்சுமணனை உனக்கு துணையாக்கி மானை துரத்தி சென்றேன். மானோ விரைந்து ஓட கோபங் கொண்ட நானோ மான் மீது பாண பிரயோகம் செய்ய அந்த மாய மான் சீத்தா லெட்பணா அபயம் என்றே வீழ்ந்தது, அக்குரலை கேட்ட நீயோ மைத்துனா உங்கள் அண்ணாருக்கு ஏதோ ஆபத்துபோல் தெரிகிறது; சீக்கிரம் சென்று பாத்துவாருங்கள் என்று தெரிவித்தாய் அவனோ மதனி அது அண்ணன் குரல் அல்ல அந்த மாயமானின் குரல் அகில உலகமே ஒன்று கூடி எதிர்த்தாலும் என அண்ணாருக்கு ஆபத்து வராது என்று மறுத்துள்ளான். நீயோ அவனிடம் ஏதோ அவதூரான வார்த்தையை கூறி அவனை அனுப்ப உன்னை ராவணன்

சிறையெடுக்க நேர்ந்தது. அதனால் நான் அடைந்த துன்பத்திற்கு அளவேது. இன்னமும் அந்த கானகம் போக வேண்டும் என்று கேட்கிறார். வேண்டாம் என் மனதை சோதிக்காதே வேறு வரம் கேட்டு கொள்வாய் தருகிறேன்.

**சீதை பாட்டு வசனம்**

**ராமர் பாட்டு தர்க்கம் ஆதி**

**கானகம் போகவேண்டாம் கண்ணே எந்தன் சீத்தா**
**உன் கற்பத்திற்கு பேதகம் வரும் கண்ணே எந்தன் சீத்தா**

**சீதை: கானகம் ராமர்**

**ஐந்து மாத கெற்பத்துடன் கண்ணே எந்தன் சீத்தா நீ**
**ஆரண்யம் போகலாமோ கண்ணே எந்தன் சீத்தா**

**சீதை: ஆசை - ராமர்**

பட்ட காலில் படுமேயடி கண்ணே எந்தன் சீத்தாபதியின் சொல்ல தட்ட வேண்டாம் கண்ணே எந்தன் சீத்தா.

**சீதை - மாமுனி: ராமர் வசனம்**

அடி பாதகி எங்கே என்குலம் என்னோடு அழிந்து விடுமோ என்று ஏக்கத்துடன் இருந்த இத்தருணத்திலே நீயோ இப்போது ஐந்து மாத கெற்பத்துடன் இருக்கிறாய். கானகம் சென்று ஏதாவது விபரீதம் நடந்து விட்டால்

*என்ன செய்வது மீண்டும் தெரிவிக்கிறேன் வரத்தை மாற்றி கொள்வாய்.*

**சீதை - பாட்டு - வசனம்**

**ராமர் கவி**

**அக்கண்ணனும் அய்யம் எடுத்துண்டார் இரண்டினாலே**
**அய்யனும் ஓர் சிரசிழந்தார் மூன்றினாலே**
**சுக்கிரனும் கண்ணிழந்தார் நான்கினாலே**
**சூர்ப்பநகையயும் மூக்கிழந்தாள் ஆறினாலே**
**தர்ச்சகனும் உயிரிழந்தான் பத்தினாலே**
**சீதையும் போய் சிறையிருந்தாள் ஜென்மத்தாலே**
**சக்கரமால் காடுகொண்டார் பனிரெண்டாலே**
**சனியினால் செய்த பலன் ஸ்தலத்தின் மீதோ.**

**வசனம்**

*அக்கண்ணன் என்று சொல்லக்கூடிய ஈஸ்வரனுக்கு இரண்டாமிடத்தில் சனி மகுத்துவம் இருந்த காரணத்தினால் மண்டை ஓட்டியே பிச்சை எடுத்துண்டார். அய்யன் என்று சொல்லக்கூடிய பிர்மாவுக்கு மூன்றாம் இடத்தில் சனி மகுத்துவம் இருந்த காரணத்தால் தனது ஐந்து சிரசில் ஓர் சிரசை இழந்தார்.*

*சுக்கிர பகவானுக்கு நான்காமிடத்தில் சனி மகுத்துவத்தால் தன் நேத்திரங்களில் ஒரு நேத்திரத்தை இழந்தாள்.*

சூர்ப்ப நகைக்கு ஆறாம் இடத்தில் சனி பார்பையால் மூக்கும் ஸ்ந்நியத்தையும் இழந்தார்.

இராவணனுக்கு பத்தாம் இடத்தில் சனி மகுத்துவத்தால் தன் பத்து சிரசையும் இழந்தான் உயிரிழந்தான்.

உனக்கோ ஜென்மத்தில் சனி மகுத்துவம் இருந்த காரணத்தால் நீயும் பத்து மாதம் அசோக வனத்தில் சிறையிருந்தாய்.

எனக்கோ பனிரெண்டாம் இடத்தில் சனி மகுத்துவத்தால் நானும் பதினான்கு ஆண்டு காலம் வனவாசம் அனுபவித்தேன். சனியனின் பார்வை உனக்கு இன்னும் இருக்கிறது. யார் என்ன செய்ய முடியும் அப்படியே ஆகட்டும்.

**ராமர் பாட்டு-ரூபகம்**

**இந்த இரண்டு வரமும் தந்தேன் தந்தேன் இன்ப மயிலே**
**குயிலே உனக்கு நான் சந்தேகம் எதற்கு தையலரே**
**பெண்ணே தந்திடுவேன் வரம் சென்றிடலாம் வனம் (மானே)**

**வசனம்**

ஜானகி நீ கேட்டபடி அந்த வரமும் அளித்துள்ளேன். தக்க சமயத்தில் உற்ற துணைவனை அனுப்புகிறேன். அக்கானகம் சென்று வரலாம் நீ அந்தபுற(ர)ம் சென்று வருவாய்.

**ராமர் விருத்தம் காப்பி**

**செப்புதல் கேட்ட போது செறுநகை நகைத்து**
**ராமர் அப்படியே நல்லது ஆகட்டும் என்று சொல்லி**
**சர்ப்பணையின் காலந்தானோ ஜானகி கேட்டாளென்று**
**அற்புத காவலோரை அழைத்து வா ஜல்தியாக.**

**ராமர் வசனம்**

*அமைச்சரே நமது பட்டணத்தின் 4448 வீதிகளிலும் நகர் சோதனை செய்யும் தலையாரி மார்களை அழைத்தி வருவீர். (தலையாரிவீகள் வருகை)*

**ராமர் பாட்டு அடைதாளம்**

**காவல்காரரே கன வேகதீரரே நீங்கள்**
**வந்த காரியம் இப்போ சொல்வேனே**
**பட்டணம் சுற்றி பதிவிருந்துமே சேதியை அறிந்து**
**நீங்கள் சீக்கிரம் வருவீர்.**

**ராமர் வசனம்**

*தலையாரிமார்களா நான் பதினான்கு ஆண்டு காலம் கானகம் சென்ற போது நமது நாட்டை தம்பியாகிய பரதன் அரசு புரிந்து வந்தான். மக்களின் நலன் அறியாதவன் நான் ஆனதால் நீங்கள் யாவரும் ஒன்று சேர்ந்து வீதிவீதியாக பதிவிருந்து மக்களின் நலன்களையும் அவரவர்கள் பேசக்கூடிய வார்த்தைகளையும் கேட்டு வரவேண்டும். அப்படி சோதனை செய்யும் போது*

யாராவது அபதூரரான வார்த்தைகளை தெரிவித்தால் அவர்களை நீங்கள் தண்டிக்க கூடாது, என்னிடம் அழைத்து வரவேண்டும் சென்று வாருங்கள்.

தலையாரி வண்ணானை கட்டி வருதல்.

**ராமர் பாட்டு ஆதி**

**இவன் இப்படி புலம்புவது ஏன்**
**எந்தவிதமான துக்கம் வந்ததினால் இக்கலக்கம்**
**இப்படி புலம்புவது ஏன், ஏன், ஏன்**
**ஒப்புதலாகவே நீங்கள் தப்பாமல் சோதிக்கும் போது**
**தப்பிதமான வார்த்தை செப்பியே ஏது சொன்னான். (இப்)**

**கட்டளை படிக்கே நீங்கள் காவலர்கள் சென்ற போது**
**துஷ்டதனமான வார்த்தை கஷ்டமாக என்ன சொன்னான் (இப்)**

**ராமர் வசனம்**

தலையாரிமார்களே யார் இவன். இவன்மீது என்ன குற்றம் இவன் தேம்பி தேம்பி அழுகிறான். இவன் செய்த தவறென்ன சீக்கிரம் தெரிவிக்க வேண்டும்.

**தலையாரி வசனம்**

**ராமர் விருத்தம் காப்பி**

**ஏதுதான் சொன்னான் சொல்வீர் எந்தன் மீது குற்றமாக**
**பாதக ராமன் என்று பார்தனில் உறைத்திட்டானோ**

**சீதையின் மீது குற்றமாக தேடியே உறைத்திட்டானோ**
**நீர்த்மாய எந்தனுக்கு நீங்களும் உறை செய்வீர்.**

**ராமர் பாட்டு ஆதி**

**வண்ணானிவன் என்ன சொன்னான் சொல்லுவீர் அந்த**
**வார்த்தையை எனக்கு நன்றாய் புல்லுவீர்**
**வன்மையாய் நகர் சோதனை செண்மையாக நீங்கள் போன**
**போது சொன்ன தேது.**

**வசனம்**

*தலையாரிமார்கள் நீங்கள் காவல் புரியும் போது இந்த எழைகுடி மகன் என் மீதோ என் குலத்தின் மீதோ கூறிய வார்த்தைகள் என்ன விபரமாக தெரிவிக்க வேண்டும்.*

**தலையாரி-வசனம்**

**ராமர் பாட்டு**

**ஏது இவன் சூது பழி சொல்லவோ**
**உலகம் எங்கிலும் அறிந்தால் வசை அல்லவோ**
**இந்த எழை உங்களிடம் எந்தவிதமான வார்த்தை**
**உரைத்தான் சொல்லி மறைத்தான்.**

**ராமர் வசனம்**

*காவல் இவன் அப்படி என்னா சூதான வார்த்தை தெரிவித்தான் உண்மையை ஒளிக்காமல் தெரிவிக்க வேண்டும்.*

**தலையாரி வசனம்**

**ராமர் பாட்டு ஆதி**

**விட்டு விடு கெட்டு விடும்**
**உலகம் மேலே விண்ணவர் அடிறிந்தால் மெத்த கலகம்**
**வெய்யவள் குலத்தில் வந்த தைய்யள்**
**இவளாலே வசை ஆச்சே மானம் போச்சே.**

**ராமர் வசனம்**

தலையாரிமார்களா இவன் இல்லாத வார்த்தைகளை தெரிவிக்கவில்லை உண்மையைத்தான் தெரிவித்துள்ளான்.

**ராமர் விருத்தம் முகாரி**

**குற்றம் நம்மிடத்தில உண்டு**
**குவ்வலையர் வண்ணான் மீது**
**சற்றுமே குற்றமில்லை தலையாரிமாரே கேளீர்**
**மெத்தவே அய்யோத்தி நாட்டை வீதிகள் தப்பர்மல்**
**நீங்கள் இத்தனை நாட்கள்போல இருந்திடீர் காவலோரே.**

**ராமர் வசனம்**

காவல் இராவணனால் சிறைபட்டு பத்து மாதம் அசோக வனத்தில் இருந்தது உண்மையே அதைத்தான் சொல்லியிருக்கிறான். அவன் மீது என்ன குற்றம் அவன் இதுவரை ஆடைகளின் அழுக்கைத்தான் நீக்கினான் இப்போது அய்யோத்தி மன்னனின் அழுக்கையே நீக்கிய அத்தமன ஆனதால் அவனின் கட்டை அவிழ்த்து

அவனுக்கு தக்க சன் மானத்தை கொடுத்து தன் மானத்தோடு அவனின் இல்லம் விட்டு நீங்கள் யாவரும் அவரவரின் இல்லம் சென்று வாருங்கள்.

**ராமர் பாட்டு சாப்புதாளம்**

**வண்ணானுக்குள்ள மதி எனக்கில்லை**
**வந்துதே அபமான சொல்லே**
**சீதையை ராவணன் சிறையெடுத்தது பொய்யோ**
**சிந்தை கலங்கிநான் தவிக்குரேன் ஐய்யோ (வண்)**

**ராமர் வசனம்**

ஆ என்ன செய்வேன் ஏ சூரிய குலமே ஓர் ஏழை குடிமகனுக்கு உள்ள மானம் நமக்கில்லையா? இதை போக்குவதற்கு என்னவழி? ஆம் இருக்கிறது ஒரே வழி வனம் பார்க்க வரம் பெற்றுள்ளாள். சீதை அதையே காரணமாக வைத்து தம்பிமார்களில் ஒருவனை துணையாக்கி அன்னவளை கானகம் விடுவதே நல்ல மார்க்கம். யாரங்கே எனது தம்பியாககிய சத்துருக்கனை அழைத்து வருவீர்.

*(சத்துருக்கன் வருதல் )*

**ராமர் - விருத்தம் முகாரி**

**அழி(மு) க்கினை எடுக்கும் வண்ணான்**
**அர்த்த ராத்திரி நேரத்தில் செழித்துமே இருக்கம் ராமர்**

சீதையை சேர்ந்தேன் என்று
இழுக்குகள் சொன்னதாலே ஏங்கியே மூர்ச்செழுந்து
அழைப்பித்து தம்பிமாரை அவர்கள் முன் புலம்புவாரே

**ராமர் பாட்டு ஆதி**

இந்த அப வார்த்தை தன்னாலே
எந்தன் மனது சிந்தை நோகுதே எந்தன் பெண்ணாலே
தந்தை தசரதற்கு மைந்தனாக வந்துதித்தோம்.
இந்த பழிக்காகவோ நாமும் பிள்ளை பிறந்தோம். (இந்த)

சூரிய குலத்தில் பிறந்தோம்
எவர்களுக்கும் வீரியவனாக சிறந்தோம்
நாரியிவளாவல்லவவோ நம்குலத்திற்கு ஈனமாச்சோ (இந்த)

நாலு பிள்ளைகள் பிறந்தோம்
எவர்களுக்கும் மேலும் மேலாக சிறந்தோம்
வேல்விழி சீதையாலே வேதனைக்கு ஆளாகினோம்
ஆதலினாலே இந்த அந்நிதத்திற்கென்னா செய்வேன்.

**ராமர் வசனம்**

*சத்துருக்கனா நான் நமது காவலர்களை அழைத்து நமது பட்டணம் 4448 வீதிகளிலும், நகர் சோதனை செய்து வரும்படி தெரிவித்தேன். அவர்கள் அவ்வாறு சோதனை செய்யும் எல்லா வீதிகளிலும் ராமன் ராமராஜ்யம் வாழ்க வாழ்க என்றே வாழ்த்தினார்களாம். கடைசி வீதி*

வண்ணார வீதியில் ஏதோ சத்தம் கேட்க காவலர்கள் பதிவிருந்து கவனித்தார்கள். ஓர் வண்ணான் தன் மனைவியை அடிக்க அவள் பிணங்கி தனிமையாக தாய்வீடு சென்று விட்டாளாம். அவளை மீண்டும் அழைத்து வந்து குடும்பம் செய்யா என்று தாயானவள் கேட்க அதை கேட்க அக்குடிமகன் கணவன் அடித்து மனைவியோ தனிவழியோ சென்றவளை இனி அழைக்க மாட்டேன் என்று மறுத்துள்ளான். அதற்கு அந்த தாயானவள் அப்படி யாரும் தனிமையாக சென்றவர்களை மீண்டும் அழைத்து வந்து வாழவில்லையா என்று கேட்க, அப்படி யாரம்மா வாழ்ந்தார்கள் என்று கேட்டான் அந்த குடிமகன். கிழவியானவள் சிறையிருந்த சீதையை சிறைமீட்டு வாழும் இந்நாட்டின் ராமபிரானின் குடும்பத்தை விட உன் குலம் என்னடா உயர்ந்தது என்று கேட்டளாம்.

அதற்கு அக்குடிமகன் அம்மா அவர்களோ உயர்ந்த குலம், உயர் அந்தஸ்தில் உள்ளவர்கள் அவர்கள் எதையும் செய்யலாம், யாரும் எதையும் கேட்க மாட்டார்கள், மேலும் அவர்கள் குலம் சூரிய குலம் அவர்களுக்கு அடுக்கலாம் என் குலம் வீரபத்திர குலம் எனக்கு அடுக்காது என்று தெரிவித்துள்ளான். அதை கேட்ட காவலர்கள் அவனை கைப்பிடியாக பிடித்து என்னிடம்

அழைத்து வந்து விபரத்தை தெரிவித்தார்கள். உண்மையைத்தான் தெரிவித்துள்ளான். அவன்மீது குற்ற மில்லை என்று எண்ணி அவனை அவனின் இல்லம் அனுப்பி உன்னை அழைத்தேன். நீ என்ன செய்ய வேண்டுமென்றால் இப்போதே நமது கார்மேகம் என்னும் ரதத்தை அலங்காரம் செய்து பஞ்சகல்யாணி என்ற புரவியை பூட்டி அதில் சீதையை அமர்த்து நீயே தேர்சாரதி செய்து கதிரவன் ஒளி காணாத காரிருள் சூழ்ந்த அந்த தெண்டகா வனத்தில் விட்டு வருவாய் சத்துருக்கனா.

**சத்துருக்கன் பாட்டு வசனம்**

**ராமர் பாட்டு ஓரடி தாளம்**

**தடுத்து எந்தன் வார்த்தை சொன்ன சத்துருக்கா தம்பி**
**ஜானகியை விட்டுவாடா சத்துருக்கனா**
**அம்புவியாள் ஜானகியை சத்துருக்கனா தம்பி**
**ஆரண்யத்தில் விட்டுவாடா சத்துருக்கனா தம்பி**
**துஷ்ட வண்ணான் வார்த்தை கேட்டு**

**சத்துருக்கனா தம்பி சோறுதடா எந்தன் மனம்**
**சத்துருக்கனா பாரில் வண்ணான் வார்த்தை கேட்டு**
**சத்துருக்கனா தம்பி பதருதடா எந்தன் மனம்**
**சத்துருக்கனா தம்பி.**

**ராமர் கவி**

**கடைமாது ராச்சிகை கானுரும்**
**வேங்கை இடம் வீழ்ந்து உண்ணாதிறக்கும்**
**திடமுடைய வானக மட்டும் வரின் .**

**ராமர் வசனம்**

சத்துருக்கனா காட்டில் வசிக்கும் வேங்கையென்ற மிருகம் தனக்கு பசியான நேரத்தில் ஓரிரு ஜீவனை அமையுமாம். அப்படி அறையும்போது அந்த ஜீவனானது வீரம் பொருந்திய வலது புறத்தில் வீழ்ந்தால் அதை புசிக்குமாம். வீரம் குறைவான இடது புறம் வீழ்ந்தால் எவ்வளவு பசி இருந்த போதிலும் புசியாமலே போய்விடுமாம். கவரிமான் தாவி ஓடும்போது தன் உடலில் ஏதேனும் ஓர் உரோமம் அருந்துவிட்டால் தன் மானம் போய்விட்டது என்று தன் உயிரையே விட்டுவிடுமாம் அப்படி காட்டிலே வாழும் ஐந்து அறிவு படைத்த மிருகங்களுக்கு உள்ள மானம் நாட்டையே ஆளும் மன்னனுக்கு இல்லாமல் போய்விடுமா விட்டு வர முடியுமா முடியாதா என்ன தெரிவிக்கிறாய்.

**சத்துருக்கன் பாட்டு வசனம்**

**ராமர் பாட்டு ஏகதாளம்**

**ஏதேதோ நீ தடுத்து வாதாடுராய் சாதித்து**
**என் முன்னே நில்லாதடா**

**சத்துருக்கனா என் முன்னே நில்லாதடா கோபகுறியந்தும்**
**குற்றமதை நீ தெரிந்தும். (ஏதே)**

**ராமர் வசனம்**

*சத்துருக்கனா எப்போதும் என் வார்த்தையை தட்டாதவன் சீதையின் முகாந்திரம் கட்டி பேசியதால் என் சமூகத்தில நிற்காதே அப்புறம் போடா துஷ்டா. பிரதான் அந்தபுரம் சென்று அருமை தம்பி பரதனை அழைத்து வருவாய். (பரதன் வருகை)*

**ராமர்**

*பரதா நீர் வந்து வெகு நேரம் ஆகிவிட்டதா ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருந்து விட்டேன். உன்னை அழைத்த விபரம் இதோ தெரிவிக்கிறேன்.*

**ராமர் பாட்டு ரூபகம்**

**என்ன பாவம் செய்தோமடா தம்பி**
**இந்த விதிக்கு நாம் ஆளாகினோம்**
**வண்ணானும் உகமைச் சொல்ல தம்பி**
**நமக்கு வந்துதடா பெரும் அபகீர்த்தி**
**எண்ணாதும் எண்ணுதடா தம்பி**
**இவ்விதிக்கு நான் என்னா செய்வேன்.**

**தென்னிலங்கை சிறையிருந்தாள்**
**மீண்டபின் சீதை வன்னிதனில் மூழ்கியே வந்தாள்**

**குன்னம் வராதென்று கூட்டி நான் வந்தேனடா**
**கூட்டி வந்ததினால் குறைவுகள் வந்ததடா.**

**சீதையென்றழைத்த பேச்சாலே**
**உலகமெங்கும் ஓதுவர்க்கிடமுமாச்சுதே**
**பாதகமென்றெண்ணியதால் பழிப்பிற்கு ஆளாகினோம்**
**ஆதலினாலே வந்த அன்னிதத்திற்கென்னா செய்வேன்.**

**ராமர் வசனம்**

பரதா நான் நமது காவலர்களை அனுப்பி நகர்தனை சோதித்தேன். அப்போது ஓர் ஏழைக்குடிமகன் வண்ணான் சிறையிருந்த சீதையை கூட்டி வந்து வாழும் நமது குலத்தைப் பற்றி ஓர் வண்ணான் இழிவாக தெரிவித்து விட்டான். அதனால் அன்னவளை வைத்து வாழக்கூடாது என்று தம்பியாகிய சத்துருக்கனை அழைத்து அன்னவளை கானகம் விடும்படி தெரிவித்தேன். அன்னவன் என் வார்த்தையை தடுத்து மறுத்து சென்று விட்டான். நீர் அப்படி தடுக்காமல் கார்மேகம் என்னும் ரதத்தை அலங்காரம் செய்து பஞ்ச கல்யாணி என்ற புரவியை பூட்டி நீயே தேர் சாரதி செய்து கதிரவன் ஒளி காணாத காரிருள் சூழ்ந்த தெண்டகா வனத்தில் விட்டு வருவாய் பரதா.

**பரதன் பாட்டு வசனம்**

**ராமர் பாட்டு ஆதி**

தடுத்து சொல்லவும் கூடுமோ தம்பி
பரதா தடுத்துச் சொல்லவும் கூடுமோ.
தடுத்துச் சொல்லக் கூடுமோ அடுத்து எந்தன் முன்னாலே
பதைத்து வண்ணான் சொன்னதை பாராமல் பேசுகிறாய்.

தேசத்தோர் சொல்லி நகைக்க
சீதையை வைத்து பாசமாய் வாழக்கூடமோ
மாசற்ற குலத்திலே மறுவது வந்ததடா
பாசமுள்ளாளை விட நேசனே போய்வாடா.
சீதையென்றழைத்த பேச்சாலே
உலகமெங்கம் ஓதுவர்கிடமுமாச்சுதே
பாதகமென்றெண்ணியதால் பழிப்பிற்கு ஆளாகினேன்.
ஆதலினாலே இந்த அந்திதத்திற்கென்னா செய்வேன்.

**ராமர் வசனம்**

அடே பரதா சீதையை இராவணன் சிறையெடுத்தது உண்மையா இல்லையா? அதைத்தானே சொல்லியுள்ளான் அவன்மீது என்ன குற்றம் அவனை சிரசாக்கினை செய்து வருகிறேன் என்றாய் அப்படி செய்துவிட்டால் அவன்னவள் மீது ஏற்பட்ட வார்த்தை அழிந்து விடுமா? மறைந்து விடுமா? ஒரு காலமும் அழியாது இதோ தெரிவிக்கிறேன் கேள்.

**கவி**

**கூத்து நாய் கவ்வ குளக்கன்னு தன் வாயால்**
**பேத்தினார் இங்கில்லையே மாந்தர்.**

**வசனம்**

*பரதா கூத்து என்றுச் சொல்லப்பட்ட ஓர் வெறி பிடித்த நாய் ஓர் மனிதனை கடித்துவிட்டால் அம்மனிதன் பதிலுக்கு அந்த நாயைவா கடிப்பான்? கடிக்க மாட்டான் கடியை போக்க பச்சிலையைத் தேடிச் செல்வான். குற்ற மற்ற அவ்வண்ணானை கொல்வது நமக்கு நீதியாகுமா? சீதையை வனம் விட்டுத்தான் வரவேண்டும் என்ன தெரிவிக்கிறாய்.*

**பரதன் பாட்டு வசனம்**
**ராமர் பாட்டு சாப்புதாளம்**

**உத்தம குண பரதா........ பரதா**
**உத்தம குணாளன் என்று சித்தத்தில் நினைந்திருந்தேன்**
**கற்ற வித்தைகளை மெத்தவும் ஓதுகிறாய்; (உத்தம)**

**பத்து மாதம் சிறையில் வைத்தானே இராவணன்**
**பாரினில் ஓர் வண்ணான் பழியது சொன்னானே (உத்தம)**

**ராமர் வசனம்**

*பரதா சிற்றன்னை கைகேசியினால் நானே கானகம் சென்றேன் நீயோ கேகய நாட்டில் இருந்தாய். எனக்கு*

மகுடம் சூட்டும் செய்தி கேட்டு அயயோத்தி வந்து அண்ணன் காடு சென்றான் என்று செய்தி கேட்டு உனக்காக உன் தாய் வாங்கி தயாராக வைத்த மகுடத்தை உதறி தாயை எட்டி உதைத்து படைகளை திரட்டி என்னை தேடி கானகம் வந்தவனா நீ அண்ணா தாயை ஏவி பட்டத்தைப் பறித்து கொண்ட பரதன் நம்மை இக்காட்டை விட்டே விரட்ட படைகளை திரட்டி வருகிறான். உத்திரவு கொடுங்கள் அவனையும் அவனின் படைகளையும் அழித்துவிடுகிறேன் என்றான் லெட்சுமணன். அப்போது லெட்பனா ஆறுதல் சினமேம் என்றும் பரதனின் குணம் எனக்குத்தான் தெரியும். அவன் நம்மை அழைத்து செல்லவே வருகிறான், என்றேன். அதுபோலவே வந்தாய் என் பாதத்தை பிடித்து அழுது புலம்பி வாருங்கள் அரியாசனத்தில் அமருங்கள அக்காட்சியை நானும் நாட்டு மக்களும் கண்ணால் காண வேண்டும் என்று கெஞ்சினாய். நானோ பரதா பெற்ற தாயானாலும் சிற்றன்னையானாலும் அவர்கள் சொல்லிற்கு கட்டுபட்டவன் நான். நான் வரும் வரையில் நீர் தான் நாடாள வேண்டும் என்றேன்.

நீயோ தாங்கள் பாதுகையாவது கொடுங்கள் என்று வாங்கி தலையில் சுமந்து நந்தி என்னும் கிராமத்தில அரசமரத்தடியில் வைத்து பூஜித்து பதினான்கு ஆண்டு காலம் அரசு புரிந்த பரதனா என் வார்த்தையை தடுப்பது.

பரதா நான் என் மனைவியிடம் ஓர் நாள் பரதனின் குணம் லெட்சுமணனின் குணம் எப்படி என்று கேட்டேன். அதற்கு அன்னவளோ தீயை மூட்டி மத்தியில் விழ வேண்டும் என்றால் மைத்துனர் பரதன் ஏன் எதற்கு என்று கேட்காமல் வீழ்ந்து விடுவார். ஆனால் இளைவரோ நான் என்ன குற்றம் செய்தேன் ஏன் விழவேண்டும்என்று கேள்வி கணையை தொடுப்பார் என்றாள். இப்படியெல்லாம் குணம் உள்ள நீ என் வார்த்தையை தடுத்துப் பேசலாமா? விட முடியுமா ? விட முடியாதா? ஒரே பதில்.

**பரதன்-பாட்டு வசனம்**

**ராமர் பாட்டு ஆதி**

**போடா என் முன்னே நில்லாதே**
**தம்பி பரதா போடா என் முன்னே நில்லாதே**
**கோபக்குறியறிந்தும் குற்றமதை நீ தெரிந்தும்**
**கொண்டுவிட லாகாதென்றும் சண்டாளா நீ எட்டிபோடா.**

**ராமர் வசனம்**

அடே பரதா எப்போதும் என் வார்த்தையை தட்டாதவன் தற்போது தடுத்து பேசியதால் என் சமூகத்தில் நிற்காதே அப்புறம் போடா துஷ்டா.

யாரங்கே அந்தபுரம் சென்று என் அருமை தம்பி லெட்சுமணனை அழைத்து வருவீர். (லெட்சுமணன் வருகை)

**ராமர் வசனம்**

அருமை தம்பி லெட்பணா நீயோ வந்து வெகுநேரம் ஆகிவிட்டதா. தம்பி ஏதோ மனக்கவலையில் இருந்த காரணத்தால் என் நிலை இப்படியாகி விட்டது இதோ உன்னை அழைத்த விபரம் தெரிவிக்கிறேன் தம்பி.

**ராமர் விருத்தம் கேதாரம்**

எனது தம்பி லெட்பணா சொல்லை கேளீர் இன்பமுடன்
ஜானகியை ரதத்தில வைத்து வனமது போகவேதான்
வன்மையுள்ள பரதன் சத்துருக்கன் தனக்கும் சொன்னான்.

ஜானகி தன்னை விடக்கூடாதென்றவர்கள் தடுத்து என்
முன் சொன்னதாலே மனதிற்கு பிரியமுள்ள தம்பி
லெட்பணா மாதை வனத்தில விட்டுவாடா.

**பாட்டு-ருபகம்**

என்ன செய்வன்டா லெட்பணா
ஏது நான் செய்வனடா என்ன செய்வேன் தம்பி
கன்னி சீதையாலே குன்னங்கள் வந்துதடா
குன்னம் வராதென்றல்லே.

சீதையை கூட்டிநான் வந்தனடா
கூட்டி வந்ததினால் இப்போ குறைவுகள் வந்ததடா
வண்ணானும் தூட்சனம் சொன்னானென்று
இந்த வையகத்தோர் நகைக்க

எனக்கெண்ணாதும் எண்ணுதடா
எனக்கெண்ணாதும் எண்ணுதே
எம் மனம் குண்ணுதே
இனி என்னா செய்வேனடா.

சத்துருக்கன் பரதன் என் வார்த்தையை தடுத்துமே
சொன்னானடா அவர்கள் தடுத்துமே சொன்னதாலே என்
சித்தம் கலங்குதடா. என் சித்தம் கலங்குதே திரேகமும்
சோருதே. இனி என்னா செய்வனடா.

**துரிதம்**

அம்புவியாள் இந்த வம்பான சீதையால் துன்பங்களானேடா
நான் நம்பியிருந்தேனடா
நான் நம்பிருந்தேனே துன்பங்கள் வரலாச்சே
நானிதற்கு என்னா செய்வேன்.

**ராமர் வசனம்**

அருமை தம்பி லெட்பணா நான் நமது பட்டணத்தை நகர் சோதனை செய்ய காவலர்களை அனுப்பினேன். அவர்கள் சோதனை செய்யும் போது எல்லா வீதிகளிலும் ராமா வாழ்க ராம ராஜ்யம் வாழ்க வாழ்க என்றே தெரிவித்தார்களாம். கடைசி வீதியில் ஓர் வண்ணான குடும்பத்தின் குழப்பத்தினால் சிறைவைத்த சீதையை சிறை மீட்டு வாழும் நம்குலம் தாழ்ந்தது அவனது குலம் உயர்ந்தது என்றும்தெரிவித்துள்ளான். அதை காவலர்கள்

என்னிடம் தெரிவித்தார்கள். அவன் உள்ளத்தை தானே தெரிவித்துள்ளான் என்று அவனை அனுப்பி சத்துருக்கன் பரதனை அழைத்து சீதையை கானகம் விடும்படி தெரிவித்தேன் அவர்களோ என் வார்த்தையை தடுத்துவிட்டார்கள். நீர் தடுக்காமல் கார்மேகம் என்னும் ரதத்தை அலங்காரம் செய்து கல்யாணி என்ற புரவியை பூட்டி காரிருள் சூழ்ந்த கதிரவன் ஒளி காணாத தெண்டகா வனத்தில விட்டுவர வேண்டும் லெட்பணா.

**லட்சுமணன் பட்டு வசனம்**

**ராமர் பாட்டு ஆதி துரிதம்**

**போ போ போடா லெட்பணா**
**எனக்கு புத்தி புகட்ட வந்தாயோ லெட்பணா**
**மானம் ஈனம் இல்லாத உங்களுடன் நான் பிறந்தேன்**
**ஈனமான சொல்லை கேட்டு இருக்க என்னாலாகுமோ (போ)**

**சீதையை ராவணன் சிறையெடுத்தது பொய்யோ**
**சிந்தை கலங்கி நான் நின்றதும் ஐய்யே**
**பாதகம் என்று எண்ணியதால் பழிப்பிறகு ஆளாகினேன்**
**ஆதலினாலே இந்த அன்னிதத்திற்கென்னா செய்வேன். (போ)**

**வசனம்**

அடே லெட்பணா நீயும் எனக்கு புத்திமதி புகட்டவா வந்தாய். சீதையை இராவணன் சிறையெடுத்தது

உண்மையா? இல்லையா? அவன் மீது என்னடா குற்றம். உண்மையை சொன்ன உத்தமன் அவன். டேய் இதோ தெரிவிக்கிறேன் கேள்.

**கவி**

கூந்தலும் அவிழ்ந்து தூய குடித்தனம் செய்யும் மாதும் ஏந்திலே குழவி கூற எடுத்து அணையாத மாதும் வாழ்ந்திடும் கீர்த்திக்கு அபகீர்த்திக்கு தந்த மாதும் சாந்தமாய இவர்களை தள்ளுவது இயற்கைதாமே.

**ராமர் வசனம்**

லெட்பணா பெண்கள் தங்களின் தலைமுடியை அவிழ்த்து கழுத்திலே தறித்திருக்கும் திரு மாங்கிலியத்தில் விழும்படியாக நடந்து கொள்ளும் பெண்களையும் சிறு மதளையானது அழும்பொழுது, அதை தூக்கி பாலூட்டி ஓய்ச்சிவிடாமல் வேறு வேலையே பெரிதென்று நடந்து கொள்ளுபவர்களையும், நல்ல கீர்த்தி வாய்ந்த குடும்பத்தில் அபகீர்த்தி வரும்படி நடக்கின்றார்களே அப்பேற்பட்டவர்களையும் சாந்தமான வார்த்தைகளை கூறி வீட்டை விட்டு விலக்கி விட வேண்டுமென்று சாஸ்திரம் கூறுகிறது. அதுபோல் நமது கீர்த்தி வாய்ந்த குடும்பத்தில் அபகீர்த்தி சீதையினால் ஏற்பட்டிருக்கிறது. அன்னவளை எப்படி வைத்து வாழ்வது; அன்னவளை வனம் விட்டுத்தான் வர வேண்டும் என்ன தெரிவிக்கிறாய்.

**லெட்சுமணன் : பாட்டு வசனம்**

**ராமர் பாட்டு ஆதி துரிதம்**

எனக்கு நீ மதி சொல்ல தகுமோ
தகாதே, தகாதே, தகாதே
உனக்கு நானடங்கி நினைப்பேனென்றாய்
உள்ளம் உருகுதே என்முன்னே நில்லாதடா (எனக்கு)

ராமனென்றாய் மூன்றுலோகம் நடுங்குமே நேராய்
நாயகியால் வந்த துன்பம் யோசித்து பாராய்
சீதையை கொண்டு தெண்டகா வனம் சேராய்
விட்டு வந்து என்னிடம் பதிலை நீ கூராய். (எனக்கு)

**வசனம்**

*அடே லெட்பணா ராமனென்றால் சப்த சாகரம் அண்ட பூவனம் யாவும் நடுங்கும், அப்படியிருக்க நீ எனக்கு புத்திமதி கூறும்படி என் நிலையாகி விட்டது. என் மனைவி சீதைதானடா வனம் விட்டு வரும்படி தெரிவிக்கிறேன். உன் மனைவி மாண்டவ தேவியை விடச் சொல்லவில்லை முடியும் முடியாது ஒரே பதில்.*

**ராமர் விருத்தம் கேதாரம்**

யானைகள் தேர்தான் என்ன அடர்ந்திடும் பரிதான் என்ன
ஜானகி தானுமென்ன தம்பிமார் மூவரென்ன
மானமில்லாதவர் என்று வையகத்தோர் நம்மை ஏச
நானென்ன நீர்தானென்ன நன்றல்ல அகல போடா.

**ராமர் பாட்டு தர்க்கம் ருபகம்**

**வாரும் தம்பி லெட்பணா எந்தன் வார்த்தைதன்னை கேளடா**
**பாரிலுள்ளோர் நகைக்க ஜானகியை படைத்திட லாமோடா.**

**வசனம்**

*லெட்பணா பார் என்று சொல்லப்பட்ட சற்று ராஜாக்கள் நம்மைப் பார்த்து நகைக்கும்படி அன்னவளை வைத்து வாழலாமா கூடாது என்ன தெரிவிக்கிறாய்.*

**லெட்சுமணன் : அண்ணா ..............................**

**ராமர்**

**மாதை குலைசெய்த பேர் இந்த மானிலத்தில்**
**இல்லையோ மாமுனி பின்னோகி தாடகையை வதைத்திட**
**இல்லையோடா.**

**வசனம்**

*அடே லெட்பணா நாம் சிறு வயதினில் விஸ்வாமித்தரருடன் கானகம் சென்று தாடகையை சம்மாரம் செய்தோமடா அவளும் பெண்தானே அதற்கென்ன தெரிவிக்கிறாய்.*

**லெட்சுமணன்: மாமுனி.........................**

**ராமர்**

**கூனி கைகேசியாலே நாமும் வனவாசமும் போகையிலே**
**கானகம் ஏகி வந்த சூர்ப்பநகை ஸ்ந்நியமும் கொய்யலையோ.**

**வசனம்**

லெட்பணா பஞ்சவடியில் குடியிருக்கும் போது ராவணன் தங்கை சூர்ப்பநகைகைய மூக்கும் ஸ்நியமும் அறுத்து மானபங்கம் செய்தாயே அவள் பெண்ணல்லவா அதை நீ செய்தவன் தானே நீ என்னடா தெரிவிக்கிறாய்.

**லெட்சுமணன் : அரக்கி.................**

**ராமர் அடைதாளம் துரிதம்**

**மாமுனி சொல்கேட்டு பெற்ற மாதாவை கொல்லலையோ**
**மன்னவன் சொல்கேட்டு என் மனைவியை விட்டுவாடா.**

**வசனம்**

தந்தையின் சொல் கேட்டு பரசுராமன் பெற்ற தாயை குலை செய்தான். அண்ணனின் சொல்கேட்டு அவரது மனைவியை விடுவது என்னடா பாவம். பரசுராமன் சிறந்தவனா நீ சிறந்தவனா.

**லெட்சுமணன் வசனம்**

**ராமர் வசனம்**

லெட்பணா சமதிக்கினி முனிவரின் மனைவி ரேணுகாதேவி அவள் தினந்தோறும் கெங்கை சென்று நீராடி பிறகு மணலை கூட்டுவாள். அவளின் கற்பின் தன்மையால் பாண்டம் உருவாகும். அதில் ஜலம் திரட்டி

கணவனின் பூஜைக்கு கொண்டு வருவது வழக்கம் அப்படி ஓர் நாள் ரேணுகா தேவி நீராடும்போது கெந்துருவனானவன் ஆகாய மார்க்கமாக பவனி வருகிறான். அவனின் முகத்தோற்றம் நீரில் விழுகிறது. அதை கண்ணுற்ற ரேணுகா இப்படியும் யுவனமான புருஷனும் உண்டோ என்று மனதில் நினைந்து பிறகு கரை வந்து மணலை கூட்டி பாண்டம் செய்தாள் பாண்டமோ உருவாகவில்லை. காரணம் கற்புடைய பெண்கள் பிற ஆடவனை தன் மனதில் நினைத்தாலே தன் கற்பு அழிந்துவிடுமாம். ரேணுகாவோ மனங்கலங்கி கணவனின் பூஜைக்கு ஜலம் கொண்டுவர முடியாமல் வீடு வருகிறாள். இதை ஞான திஷ்டியினால் தெரிந்து கொண்ட சமதிக்கினி மகனே பரசுராமா உன் தாய் கற்பிழந்து விட்டாள். அவளை அழைத்து போய் ரெணக்களத்தில் வெட்டி வா என்றார், பரசுராமனோ "தந்தை சொல் மிக்க மந்திரமொன்றில்லை தாயினிற் சிறந்ததோர் கோயிலுமில்லை" என்ற கருத்திற்கிணங்கி ஏன் எதற்கு என்று கேளாமல் தாயை வெட்டி வருகிறேன். வந்த பிறகு நான் இரண்டு வரங்கள் கேட்பேன் தரவேண்டும் என்றான் பரசுராமன் தந்தையும் சரி என்று ஒப்புக் கொண்டு விட்டார். பிறகு பரசுராமன் தாயின் சிகையை பிடித்திழுத்து ரெணக்களம் சென்று வெட்டி விடுகிறான். பெற்ற தாய் அலறிய குரல் கேட்ட பரசுராமன்

மனம் கலங்கி தனது வலது கரத்தை துண்டாக்கி சிந்திய செந்நீருடன் தந்தையிடம் வந்தான். சமதிக்கினி முனிவரோ இது என்னப்பா கோலம் என்று கேட்க பரசுராமன் தந்தையே நான் கேட்ட வரத்தை தர வேண்டும் என்றான். தந்தையும் என்ன வரம் என்று கேட்க, இறந்த தாய் உயிருடன் வருவாள். ஆனால் இல்லறத்திற்கு உதவமாட்டாள் என்று சொல்லி கைய்யில் பிறம்பையும் கெண்டியில் ஜலத்தையும் கொடுத்து ரெணக்களம் என்று உன்தாய் தலையையும் உடலையும் சேர்த்து தண்ணீரை தெளித்து பிரம்பினால் தட்டினால் உன்தாய் உயிரடன் வருவாள் என்று சொல்லி அனுப்பி வைத்தார்.

பரசுராமன் ரெணக்களம் சென்ற நேரமோ இருளடைந்து விட்டது. அங்கே ஓர் புலையன் தன் மனைவியை கொண்டு வந்து வெட்டியிருக்கிறான். அங்கே இரண்டு தலைகள் இரண்டு உடல்கள் கிடக்கிறது. பரசுராமன் எது தாயின் தலை உடல் என்று தெரியமல் தாயின் உடலையும் புலைசியின் தலையையும் சேர்த்து தண்ணீர் தெளித்து பிரம்பால் தட்டுகிறான். உருவம் எழுகிறது. மற்ற தலையையும், உடலையும் சேர்த்து தட்ட அதுவும் ஓர் உருவமாக எழுகிறது இரண்டு உருவங்களையும் அழைத்துக்கொண்டு தந்தையிடம் வருகிறான். முனிவரோ பரசுராமா நான் என்ன தெரிவித்தேன். உன் தாய் உயிருடன் வருவாள்.

இல்லறத்திற்கு உதவமாட்டாள் என்றேனல்லவா. உன் தாயின் தலைமாறிய காரணத்தினால் இன்று முதல் அவளே இப்பூவுலகில் மாறியாகவும், புலைச்சியின் உடல் மாறியதால் அவள் இப்பூவுலகில் காளியாகவும் பிறந்துள்ளார்கள். அவர்களை அனுப்பிவிடு என்றார் லெட்பனா அவர்களே இவ்வுலகின் காளி. மாறி என்று அழைக்கப்படுகிறார்கள்.

**லெட்சுமணன் பெண் ......**

**வசனம்**

**ராமர் - விருத்தம் காப்பி**

தம்பி லெட்பணனே காளாய்
தாரணி மனிதரெல்லாம் பின்பதை பறிகழிக்க
பிர்மனுக்கிமாகும்.
பின்பு சத்துருக்கன் தானும் புஜபல பரதன் நீயும்
என் தம்பிமார்களானால் என் சொல்லை தட்டுவீரோ.

**ராமர் பாட்டு தர்க்கம் ரூபகம்**

எந்தன் வார்த்தையை தடுத்து பேசுராய்
ஏதடா எந்தன் தம்பி லெட்பணா
ஈசன் அருளாலே பிறந்தோம் நாம்
இணைபிரியாமலே வளர்ந்தோம்
இத்தனை நாள் இது வரையில்
இத்தனை நாள் இது வரையில்
செப்புமொழி தடுக்காதவன் (எந்த)

**லெட்சுமணன்: சின்ன........... (துரிதம்).**

**ராமர்**

சத்துருக்கன் தன்னை அழைத்து
சீதையை தார்வனம் தன்னில் விட சொன்னேன்.
ஜானகியாள் லோக மாதா தடுத்துரைத்தான் மிக வேகமாதாய்
தயங்குதடா எந்தன் மனம்
தயங்குதடா எந்தன் மனம் மயங்கி மெத்த உருகுதடா (எந்த)

**லெட்சுமணன் : அன்னை ..........**

**ராமர்**

பரதன் தன்னையே அழைத்து சீதையை
பார்வனம் தன்னில் விட சொன்னேன்
என் பாதமதை வந்து பிடித்தான்
பெரும் பாவம் வரும் என்று தடுத்தான்
பதறுதடா எந்தன் மனம் பதறுதடா எந்தன் மனம்
மயங்கி மெத்த உருகுதடா (எந்த)

**லெட்சுமணன் : அண்டர்கள்.........**

**வசனம்**

**ராமர் கவி**

தன்னுடன் பிறவா தம்பி தன்னை பெறா தாயார் தந்தை
அன்னியர் இடத்துச் செல்வம் அறும் பொருள் வேசி அசை
மன்னியர் இடத்து கல்வி மறுமனையாட்டி வாழ்க்கை
இன்னமும் கருமம் எட்டும் இடுக்கத்திற்கு தவாதுக்காண்.

**வசனம்**

தன்னுடன் பிறக்காமல் பிற தாயின் குழந்தைதன் உற்ற தம்பியாக மாட்டான். தன்னை பத்து மாதம் சுமந்து பெற்று வளர்க்காதவர்கள் தாய் தந்தையாக மாட்டார்கள். பிறரின் சொத்து நமக்கு பயன்படாது, காசுள்ள வரைதான் தாசியானவள் ஒருவனிடம் நேசமாய் இருப்பாள். பிறரின் கல்வியோ நமக்கு பயன்படாது. பிறரின் மனையில் வாழும் வாழ்க்கை பலன் தராது. இத்தனையும் ஒருவனுக்கு குடிக்கொண்டிருந்தால் அவன் வாழ்வது மரக்கட்டைக்கே சமம் அதுகள் போல் நானோ கோசலையின் மைந்தன் நீயும் சத்துருக்கனும் சுமத்திரையின் மைந்தன் பரதனோ கைகேசியின் மைந்தன் ஆனதால், என் வார்த்தையை தட்டி பேசுகின்றீர்கள். விட்டுவருவாய் லெட்பணா.

**லெட்சுமணன் : பாட்டு வசனம்**

**ராமர் : பாட்டு ஆதி**

**வார்த்தையை தடுக்க ஒன்னாது**
**உந்தன் மனது ஏற்றபடிக்கெல்லாம் சொல்லதே**
**கோத்திரத்திற்கெல்லாம் அப கீர்த்திகள் வந்ததினார்**
**சாஸ்திர விதியை நன்றாய் யோசித்தவன் போலவே நின்றாய்.**

**(வார்)**

**புத்திசாலி என்று உந்தனை இதுவரையில்**
**மெத்தவும் நினைந்திருந்தேன்டா**
**இத்தனை வீதம் சொல்லியும் சித்தமும் இத(ர)ங்கலையோ**
**கற்ற வித்தைகளை நீ மெத்தவும் ஓதுகிறாய். (வார்)**

**ராமர் : கவி**

**தும்பினில் புதைத்த கல் சுதரின்றி ஒளி கொடா**
**வேம்புக்கு தேன் வார்த்தாலும் வேப்பிலை கசப்பு மாறா**
**பாம்புக்கு பால் வார்த்தாலும் பழகினும் குணம் மாறா**
**பற்பல நூல்கள் கற்ற போதிலும் துற்சகுனர் நல்லோராகா.**

**வசனம்**

லெட்பணா தும்பு என்ற சாக்கடையில் வைரக்கல்லை போட்டு அதன் பிரகாசத்தை காண முடியுமா? முடியாது அதை நம் மார்பிலே அணிந்தால் தான் அதன் பிரகாசம் நன்றாக தெரியும். வேம்பு விதையை பூமியில் இட்டு தேனையே நீராக பாய்ச்சி வளர்த்து மரமானதும் அதன் இலை ருசிக்குமா? கசக்குமா? கசக்கத்தான் செய்யும் அது வித்துவின் குணம். பாம்பின் சிறு குட்டியை கொண்டுவந்து பாலும் பழமும் கொடுத்து வளர்த்து, பருவமானதும் விரலை நீட்டினால் கடிக்குமா? முத்தம் கொடுக்குமா? கடிக்கத்தான் செய்யும் அது பிறவியின் குணம், எத்தனையோ கருத்துள்ள நூல்களை துற்புத்தியுள்ளவர்களுக்கு எடுத்துரைத்த போதிலும்

அவர்களின் குணத்தை மாற்றவே முடியாது, அதுபோல நான் உங்களுக்கு இன்னும் எத்தனை எத்தனை கருத்துகளை சொன்னபோதிலும் உன் குணம் மாறப் போவதில்லை என்ன தெரிவிக்கிறாய்.

**லெட்சுமணன் : பாட்டு வசனம்**

**ராமர் : விருத்தம் கேதாரம்**

**ஆரிலோர் கடமை வாங்கி அரசாட்சி செய்து வந்தோம்**
**பாரிலோர் வண்ணானம்மை பழியது பகரலாச்சே**
**வீரியமான வார்த்தை விருதாக பகர வேண்டாம்**
**காரிகையாளை தெண்டகா வனம் விட்டு வாடா.**

**ராமர் பாட்டு தர்க்கம் ஆதி**

**விட்டு வர உன்னாலாகாதோ அடடாதம்பி (விட்)**
**விட்டுவரலாகா தென்றாய் பட்டாகத்தி வீண்போகுமோ**
**துஷ்ட ரசகன் வார்த்தை சற்றும் நினையாமல் போனாய்.**

**லெட்சுமணன் : கொண்டு ............**

**ராமர் :**

**பாவி நான் உங்களுடனே அடடா தம்பி (பாவி)**
**பாவி நான் உங்களுடன் ஆவி வைத்து இருப்பேனடா**
**கூவியதோர் காட்டுக்குள்ளே கோதையை விட்டுவாடா.**

**லெட்சுமணன் : ஆவி விட......**

**ராமர்**

சத்தியவான் என்றிருந்தேன்டா சண்டாளா உன்னை (சத்தி)
சத்தியவான் என்று உன்னை சித்தத்தில் நினைந்திருந்தேனே
இத்தனை வீதம் சொல்லியும் சித்தமும் இத(ர)ங்கலையோ.

**லெட்சுமணன் : சத்தி ..........**

**வசனம்**

**ராமர் : பாட்டு சாப்பு**

என்ன சொன்னீர் ஏது சொன்னீர் தம்பி லெட்பணா
நான் இருந்ததெல்லாம் உங்களாலே தம்பிமார்களா
மன்னவர் இறந்து போன வருத்தம் தன்னையே லெட்பணா
மறந்திருந்தேன் உங்களாலே தம்பிமார்களா
சொன்னச் சொல்லி தட்டி நீங்கள் சொன்னதினாலே லெட்பண
என்னுயிரை மாய்த்துக் கொள்வேன் தம்பிமார்கள்.

**வசனம்**

*பெண் புத்தியால் நமதய்யா பெரியவரும் மடுவடைந்தார். பெண் புத்தியால் நானும் அந்த பேடை மான் பின் சென்றேன். பெண்புத்தியால் நீயும் பேடை மயிலை கைவிட்டாய். பெண் புத்தி கேட்பது நமது குலத்தின் பெருமையாகிவிட்டதே தம்பி நமது தந்தையானவர் கைகேசியின் வரத்தால் என்னை கானகம் அனுப்ப அவர் உயிர் பிரிந்து பஞ்சவடிவில் சீதையின்*

வார்த்தையை கேட்டு மானை துரத்தி சென்றேன் நீயும் அவள் வார்த்தையை கேட்டு அவளை பிரிந்தாய் ராவணன் சிறையெடுத்தான். அதனால் நமது குலத்திற்கே தற்போது இழிவு எற்பட்டுது லெட்பணா நான் இதுவரையில் சீதையை வனம்விட சொன்னது. உண்மை என்று எண்ண வேண்டாம். உங்கள் மனதை பரிசோதித்தேனே தவிர வேரேதுமில்லை நீ அந்தபுரம் செல்வாய்.

ஏ சூரிய குலமே எனக்கு வந்த மானம் என் தம்பிமார்களுக்கு இல்லையென்றே தெரிவித்து விட்டார்கள். அவர்கள் என் உடன் பிறந்தவர்கள் அல்லை, அவர்கள் மீதும் குற்றமில்லை வாழந்தால் மானத்தோடு வாழவேண்டும், இல்லையேல் மரணத்தை நாட வேண்டும், அதுவே மன்னனின் அழகு.

**பாட்டு ஆதி**

**மானமெல்லாம் போனபின்பு வாழ்வது ஒரு வாழ்வா**
**ஈனமானதோர் வார்த்தைதனை கேட்டு இருக்க**
**என்னாலாகுமோ (மான)**

**இழிவான சொல் கேட்டு என் மனம் வாடுது**
**ஈசா இது தர்மமோ**
**பழிவந்து சேர்ந்ததோ பாதகி சீதையினால்**
**பாவி நான் என்ன செய்வேன் (மான)**

**வசனம்**

*ஆ! ஜெகதீசா இதுவரையில் சூரிய குலத்தில் இப்படி ஓர் இழிவான சொல் வந்ததே இல்லை, இனி உயிரா மானமா? மானமே பெரிது உயிர் பெரிதல்ல யாரங்கே எனது ஆயுத களஞ்சியத்தில் சென்று எனது சந்திராயுதத்தை எடுத்து வாருங்கள்.*

*ஏ! ஆயுதமே இது வரையில் எத்தனையோ உயிர்களை பலி வாங்கி ஒய்வு பெற்றிருக்கும், உனக்கு இதோ வேலை கொடுக்கிறேன் ஏற்றுக் கொள்.*

**பாட்டு**

**ஆயுதமே ஆயுதமே ஆயுதமே சந்திராயுதமே**
**அடியேன் உயிரை எடுத்துக்கொள் ஆயுதமே.**

**வசனம்**

*ஏ ஆயுதமே தயங்காதே வா எடு என்னுரை மறுக்காதே.*

**விருத்தம் முகாரி**

**உங்களை தம்பியென்று நான் உகந்துமே இருந்த தெல்லாம்**
**செந்தணல் பூவென்றெண்ணி சேர்ந்திடும் வண்டது போல்**
**முந்தியே குறைகள் யாவும் முடிந்தல்லே தீரவேண்டும்**
**எந்தன் கை வாளினாலே என்னுயிர் மாய்த்துக் கொள்வேன்.**

**வசனம்**

என்ன ஆச்சரியம் ராமன் தூக்கிய கையை பிடிப்பவன் யாராக இருக்கலாம் தேவர்களா மூவர்களா முனிவர்களா இவர்கள் யாருமே அஞ்சுவார்கள். ஆனால் துணிச்சலுடன் வாளை பிடித்தவன் யார்? நான் என்றால்? எனக்கென்று தம்பி யாருமே இல்லை, நீ யார்? லெட்சுமணனா அட பாவி நீயோ.

**பாட்டு அடைதாளம்**

அடடா தம்பி நீ விடடா வாளை
அடடா தம்பி விடடா வாளை
வாளை பிடித்த தம்பி ஒரு வார்த்தைகள்
உண்டாடா தம்பி
வார்த்தைகள் உண்டாடா.......... சொல்லு தம்பி.

கையை பிடித்தம்பி ஒரு காரணம்
உண்டாடா சொல்லு தம்பி
காரணம் உண்டாட சொல்லு தம்பி.

**பாட்டு ஆதிதாளம்**

எந்தனை நீ ஏன் தடுக்குறாய்
தடுத்த பின்னால் என் கையை ஏன் பிடிக்குராய்
சொன்னச் சொல் தவறிய துணைவர்கள் மூவர்களும்
என் சொல்லை தட்டியதால் எட்டி அப்பாலே போடா.
மானம் ஈனம் உனக்கில்லையா

மாது சீதையை வனம் விட மனமில்லையா
ஈனமான சொல்லை கேட்டு
இருக்க என்னாலாகுமோ
உன்னாலே ஆவதென்ன
ஓகோ நீ கையை விடு (எந்தனை)

**வசனம்**

*அடே பாவி என்னை வாழத்தான் விடவில்லை என் சாவையுமா தடுக்குராய், மரியாதையாக என் வாளை விட்டு அப்புறம் சென்றுவிடு.*

**லெட்சுமணன்: பாட்டு**

**வசனம்**

**ராமர் : பாட்டு**

சபாஷ் தம்பி லெட்பணா தக்க புத்திசாலி நீ
சுபாஷ் எந்தன் தம்பியே சுருக்கில் சென்று நம்பியே.
ஜானகிக்குகந்த ரகசியம் ஜல்தியில் சொல்வேன் அவசியம்
மானை ரதத்தில் ஏறச்செய் மகிழ்ச்சியாய் வனத்தில்
செல் காரிருள் சூழ் காடடா கன்னிக்கேற்ற வீடடா
சூரிய அஸ்தம் பாரடா சுருக்கில் வந்து சேரடா.

**வசனம்**

*சபாஷ் இப்போதுதான் என் ஆசைக்குகந்த தம்பி லெட்பணன் சீதையை வனம் விடுவது உண்மை தானே இதோ அன்னவளுக்குள்ளான. முகாந்திரத்தை தெரிவிக்கிறேன்.*

**விருத்தம் கல்யாணி**

**வர்ணமாம் தம்பி லெட்பணா**
**வார்த்தை ஒன்றுரைப்பேன் கேளாய்**
**என்னுடன் சீதையற்கு ஏகாந்த வேளைதன்னில்**
**பின்னையும் வனமே பார்க்க**
**வெகு பிரியமாய் இருக்குதென்று**
**சொன்னதோர் வார்த்தை கூரி(றி) சுருக்கினில் விட்டு வாடா.**

**வசனம்**

லெட்சுமணா எனக்கும் சீதைக்கும் சீமந்தம் நடந்தபோது சீதையோ என்னிடம் இரண்டு வரம் கேட்டுள்ளாள் அதாவது என்னை போல் புத்திரபாக்ய வரம் ஒன்றும் முன் பார்த்த வனம் சென்று வன வேடிக்கை பார்த்து வர வேண்டும் என்று கேட்டாள்.

அவ்வரங்களை அளித்து தருணம் வரும் போது உற்றத்துணைவனை அனுப்புகிறேன். நீயோ வனம் பார்த்து வரலாம் என்று அனுப்பியுள்ளேன். அவளோ எப்போது உற்றத்துணைவன் வருவார் என்று வனம்பார்க்க ஆவலாக இருப்பாள் நீயோ அந்தபுரம் சென்று இம்முகாந்திரத்தை எடுத்துகூறி கார்மேகம் என்னும் ரதத்தை அலங்காரம் செய்து உனக்கு பரிசாக கொடுத்த பஞ்சக் கல்யாணி என்ற புரவியை பூட்டி நீரே தேர் சாரதி செய்து காரிருள் சூழ்ந்த கதிரவன் ஒளி காணாத தெண்டகா வனத்தில் விட்டு வருவாய் தம்பி.

**லெட்சுமணன் : வசனம்**

**ராமர் : வசனம்**

லெட்பணா தெண்டகாவனம் என்பது வெகுகாலத்திற்கு முன்பு மது மந்தாபுரி பட்டணமாக இருந்தது. அதை ஆண்டவன் தெண்டகா சூரன் அவனுக்கு சுக்ரபகவான் என்ற குரு இருந்தார் அவருக்கு ஓர் மகள் அவள் பெயர் ஓமபுக்கலை, அவள் மிகவும் அழகாக இருப்பாள், அவளோ தினந்தோறும் நந்தவனம் சென்று தந்தையின் பூஜைக்கு மலர்பரித்து சரம்தொடுத்து கொண்டு வருவாள், அப்படி ஓர் நாள் நந்தவனத்தில் மலர் பரித்து கொண்டிருந்தாள், வேடைக்குச் சென்ற தொண்டகா சூரன் நந்தவனம் மார்க்கமாக வருகிறான். அங்கு ஓமபுக்கலையை கண்டு அவளின் அழகின் மீது ஆசை கொண்டு அவளை ஆலிங்கனம் செய்து விடுகிறான், மலர் பறிக்க சென்ற மகள் வெகு நேரம் வராததை கண்டு கவலையுடன் நந்தவனம் வருகிறான். அங்கே மகளும் தெண்டகா சூரனும் வெவ்வேறு ரூபமாக இருப்பதைக் கண்டு கோபம் எழுந்து அடே தெண்டகா சூரா குருவின் மகள் என்றும் பாராமல் இக்கெட்ட செயலை செய்த உனக்கு இனி மன்னிப்பு கிடையாது. ஆனதால உன் பட்டணம் அழிந்து கதிரவன் ஒளி காணாது காரிருள் சூழ்ந்த காடாகவும் மனித சஞ்சாரமே இல்லாது போக

வேண்டும் என்றும் மகளை பார்த்து இக்காட்டில் நீ பேயாக போக வேண்டும் என்றும் சாபமிட்டார்.

தெண்டகா சூரனோ சுவாமி நான் அறியாது இப்பிழையை செய்துவிடடேன். என்னை மன்னித்து என் பெயர் விளங்கும்படி ஏதாவது செய்ய வேண்டும் என்று மன்றாடினான். சுக்ர பகவான் தொண்டகா சூரனே உன் பெயர் விளங்க இவ்வனத்திற்கு தெண்டகாவனம் என்று பெயர் சூட்டுகிறேன். அதுவுமின்றி இக்கானகத்தில் எப்போது கற்புடைய மங்கையின் பாதம் படுகிறதோ அப்போது இவ்வனம் பழைய நிலையை அடையும். அதுவரையில் என் மகள் பேயாகவும், நீ ஊருக்கு ஊர் ஓர் சுமைதாங்கியாக இருக்க வேண்டும் என்று சாபமிட்டார். அதுதானப்பா தெண்டகா வனம் வந்த விபரம். அங்கு உன் மத(தி)னியை விட்டு சூரிய அஸ்தமிக்கு முன் என் பாதம் வந்து சேர வேண்டும். அதுவரையில் இந்த சந்திராயுதம் என் கைய்யில்தான் இருக்கும் என்பதை மறவாதே சென்றுவருவாய்.

# அஸ்பமேதியாகம்

**ராமர் : பாட்டு ரூபகம்**

**இன்னும் காணேனே போன இளையவன் திரும்பி**
**என் அருகினில் வர (இன்)**
**என்ன நடந்ததோ ஏது நடந்தது**
**எதைகளை நினைந்து புலம்பி தவிக்கின்றனோ**
**தம்பியை அறு(ரு)மை தம்பியை இன்னம் காணேனே**
**வழிகள் பிசகி திகைத்து நிற்கின்றானோ**
**வெகு தூரத்தில் கேட்கின்ற மணியோசை அவன்தானோ.**
**(இன்)**

**வசனம்**

*அருமை தம்பி லெட்பணன் சீதையை கானகம் விடச் சென்றவன் இன்னும் வரவில்லையே, வழி பிசைவிட்டானா? அல்லது அண்ணியை கானகத்தில் விட்டோமே என்ற கவலையில் புலம்பி கொண்டிருக்கின்றனா ஒன்றும் புரிய வில்லையே அதோ மணி யோசை கேட்கிறது அவனாகத்தான் இருக்கும் பார்ப்போம்.*

**(லெட்சுமணன் வருகை)**

**ராமர்: வசனம்**

*அருமை தம்பி லெட்பணா சீதையை தெண்டகாவனத்தில் விட்டு விட்டாயா?*

**லெட்சுமணன் : வசனம்**

**ராமர் : வசனம்**

*தம்பி அவளின் தலை விதியை யாரப்பா அழிக்க முடியும் எல்லாம் விதியின் படித்தான் நடக்கும் அன்னவளை கானகம் விடும்போது என்ன வார்த்தையப்பா தெரிவித்தாள்.*

**லெட்சுமணன் : வசனம்**

**ராமர் : வசனம்**

*லெட்சுமணா நீயோ கானகம் சென்று வந்ததால் களைப்புடன் தோன்றுகிறாய் சற்று நேரம் இளைப்பாரி வருவாய்.*

**நாரதர்-வருகை**

**அமைச்சர் வசனம்**

**ராமர் வசனம்**

*அமைச்சரே நாரதர் வந்திருந்தால் அமரச் செய்வீர் இதோ வருகிறேன்.*

நாரதரே வணக்கம் தாங்கள் வருகை நல் வரவாகுக. என்னை நாடி வந்த காரணம் என்னவோ தெரிவிக்க வேண்டும்.

**நாரதர் : வசனம்**

**ராமர் : வசனம்**

நாரதரே என் மனைவி சீதையை ராவணன் சிறையெடுத்தான் சிறைமீட்டு அக்கினியில் மூழ்க செய்துதான் அழைத்து வந்தேன் அவள் மீது எனக்கு எந்த விதமான சந்தேகமுமில்லை. ஆனால் உலைவாயை மூடலாம் ஊர் வாயை மூட முடியுமா. அதனால்தான் வாண்ணானின் அபச் சொல்லினால் அவளை கானகம் விட்டேன்.

**நாரதர் : வசனம்**

**ராமர் : வசனம்**

உண்மைதான் அன்னவளை கானகம் விட்டநாள் முதல் நாடே இருளடைந்து விட்டது. மக்கள் மனதில் மகிழ்ச்சி இல்லை இதை நினைந்துதான் என் மனம் வேதனை பட்டு கொண்டிருக்கிறது.

**நாரதர் : வசனம்**

**ராமர் : வசனம்**

நாரதரே அஸ்பமேதியாகம் செய்யும்படி தெரிவிக்கின்றீர் இதை எப்படி யாரால் செய்ய முடியும்.

**நாரதர் : வசனம்**

**ராமர் : வசனம்**

*அப்படியானால் எனது குலக்குருவாகிய வதிஷ்ட பகவானை அழைத்து தெரிவிக்கிறேன் தாங்கள் சென்று வாருங்கள்.*

**ராமர் : வசனம்**

*அமைச்சரே அந்தபுரம் சென்று அருமை தம்பி சத்துருக்கனை அழைத்து வருவீர்.*

**சத்துருக்கன் வருகை**

**ராமர் விருத்தம் கேதாரம்**

**அடவுடன் நமது கோத்திரம்**
**அன்புடன் விளக்கமாக திருடமுடன்**
**அஸ்பயாகசம் செய்திட வேண்டுமிப்போ.**
**படிதனில் கீர்த்தி பெற்ற**
**பாங்குள்ள சத்துருக்க நீர் தான்**
**சடை முடி வதிஷ்டனா**
**நீ சல்தியில் அழைத்து வாராய்.**

**ராமர் : வசனம்**

*சத்துருக்கணா நான் அஸ்பமேதியாகம் செய்யும் படி நாரதர் வந்து தெரிவித்து போனார். அந்த யாகம் செய்யும்*

பொருட்டு நமது குலக்குருவாகிய வதிஷ்ட பகவானை அழைத்து வருவீர்.

**சத்துருக்கன் : வசனம்**

**வதிஷ்டமுனிவர் : வருகை**

**ராமர் : பாட்டு**

சருணமய்யா முனி நாதா தேவரீர் பாதம் சருணமய்யா
கருணையாய் எந்தனையே கார்த்து ரெட்சிக்க வேண்டும்.
போற்றி போற்றி முனி நாதா ஐய்யனே
பொற்பாத கமலத்தை எப்போதும் நான் மறவேன்.

**வசனம்**

*சுவாமி தாங்களின் பொற்பாத கமலங்களுக்கு எனது இரு கரம் தூக்கி சிரம் தாழ்த்தி கோடி கோடி நமஸ்காரம்.*

**வதிஷ்ட முனிவர் : வசனம்**

**ராமர் : விருத்தம் கேதாரம்**

என்னுடன் குலத்தின் முன்னோர் இறந்திட்ட
பெரியோரெல்லாம்
புண்ணிய சொர்க்கம் சேர்ந்து மோட்சமும் அடைவதற்கு
உன்னித அஸ்பயாகம் உறுதியாய் செய்வதற்கு
மன்னிய குருவே நீங்கள் வன்னமையாய் நடத்துவீரே.

**ராமர் வசனம்**

சுவாமி சீதையை கானகம் விட்ட நாள் முதல் நாடோ இருளடைந்து விட்டது அதை நினைந்து சோகத்துடன் இருந்தேன் அப்போது நாரதர் என்னை தேடி வந்தார் என் மன. நிலை கேட்டார் எடுத்துரைத்தேன். அன்னவரோ நான் அஸ்பமேதியாகம் செய்தால் உனக்கு நல்லகாலம் தோன்றும் என்று தெரிவித்தார் அந்த யாகம் செய்வதற்கே தாங்களை அழைத்தேன் சுவாமி.

**வதிஷ்டர் முனிவர் வசனம்**

**ராமர்-விருத்தம் முகாரி**

**காட்டினில் ஓட்டி விட்ட கன்னியாள் சீதைதன்னை**
**நாட்டினில் அழைத்தோமானால் நம்மையே இகழ்ச்சி செய்வார்.**

**தீட்டியே பசும் பொன்னாலே சீதைபோல் உருவம் செய்து**
**நாட்டினில் அஸ்பயாகம் நன்மையாய் செய்யுமய்யா.**

**ராமர் வசனம்**

சுவாமி நானும் முன்னும் பின்னும் பழிச் சொல்லிற்காளானவன். ராவணன் சீதையை சிறை யெடுத்தான் வண்ணான் பழியது. சொன்னான் அதனால் அன்னவளை கானகம் விட்டேன். தற்போது இந்த யாகம் செய்ய அன்னவளே நாட்டிற்கு அழைத்தோமானால்

நாட்டிலுள்ள பிரைஜைகள் இன்னும் ஏளனம் செய்வார்கள் ஆனதால் என்னிடம் தங்கம் வைடூரியம், கோமேதகம், புஷ்பரகம் போன்ற ஒன்பது வகை நவரத்தினங்கள் இருக்கிறது அதை கொண்டு சீதையைப் போன்று உருவம் செய்து என் அருகாமையில் வைத்து யாகம் செய்தால் செய்யுங்கள் இல்லையேல் யாகத்தையே நிறுத்தி விடுங்கள்.

**வதிஷ்டர் முனிவர் : வசனம்**

**ராமர் : வசனம்**

சுவாமி இதோ விக்ரகமும் அதற்கு தேவையான பொருட்களும் தயாராக உள்து யாகத்தை செய்து முடியுங்கள்.

**வதிஷ்டர் முனிவர் : வசனம்**

**ராமர்-விருத்தம் கேதாரம்**

**சீர்பெறும் அய்யோத்தி நகர் தசரதர் மைந்தராம்**
**ஸ்ரீராமர் எழுதும் விரபட்டம்.**
**சிறுவயதில் முனிவர்பின் சென்று தாடகையை வதைத்து**
**வில்தன்னை ஒடித்த தீரன்.**

**காம்போதி**

கபட மானாக வந்த மாரீசனை கொன்று, கார்கொண்ட சூர்ப்ப நகையை மூக்கறுத்ததீரன்.

**பைரவி**

ஊர் கொண்ட வாலியை

மராமரம் தன்னோடு உறுகத் துளைத்த தீரன்.

வல்லாழ்மை வாலியை மார்பை பிளந்தவன்

வானரங்களை துணையாக கொண்டவன்.

வடிவான கடலையே அணையாக கட்டிய தீரன்.

**கேதாரம்**

வாறுதி அடைந்த பின் வாகன் இலங்கையில்
கோடி கோடியாய் மடியவே
வருகின்ற குதிரைக்கு எதிரிகள் இல்லையென
வனரந்திட்ட வீரபட்டம்.

**வசனம்**

*சுவாமி இதோ வீரப்பட்டயம் எழுதி விட்டேன் சரி பாருங்கள்.*

**வசிஷ்டர் முனிவர் : வசனம்**

**ராமர் : வசனம்**

*சுவாமி தாங்கள் சொன்ன பிரிகாரம் சத்துருக்கனை திக்கு விஜயம் செய்யும்படி தெரிவிக்கிறேன் தாங்கள் சென்று வாருங்கள்.*

**ராமர் பாட்டு**

தம்பி சத்துருக்கா தென்புடனே

சுருக்கா தம்பி சத்துருக்கா.

**யானை சேனை படைகளும் ஐம்பத்தாறு தேச மெங்கம் திக்கு விஜயம் செய்து ஜெய முடன் வருவாயடா. (தம்பி)**

**வசனம்**

*சத்துருக்கனா நீயும் நமது தளங்களுக்கெல்லாம் தளபதியான தள கர்த்தனையும் எழுபத்திரெண்டு வெள்ளம் சேனைகளையும் கூட்டி கொண்டு திக்கு விஜயம் செய்யவேண்டும் நீயோ செல்லும் நாடுகளின் விபரம் தெரிவிக்கிறேன்.*

*ஈழம், பாண்டியம்., யாழ்ப்பாணம், சேரன், சோழன் கொங்கு, வங்காளம், மகதம், சீனம், குஞ்சரம், ஆரியம், மலையாளம், கன்னடம், துளுவம், சிங்களம், அவிந்திதேசம், வடமதுரை, சிந்து, பாஞ்சாலம், சோனகம், டில்லி, நிடதம், கேகயம், பாஞ்சாலம், சௌரி ராட்டிரம், அங்கம் அருணம், மிதுலை, கன்னோசி, காம்பீலி, காம்யோதி, நேப்பாளம், கங்காலா ஒட்ட தேசம், சர்விந்திர ராஜ்யம், உகாந்திரதேசம், பப்பரதேசம், பல்லவ தேசம், சேது ராஜ்யம், ஆனந்தாபுரி, அஸ்தனபுரி, கொஞ்சி, மச்சாபுரி, மாயாபுரி, விருத்தபுரி, தசாமந்தபுரி, மகவிந்த ராஜ்யம், சேனை நாடு, கொல்லாபுரி, கோசலா புரி, வீமாரி அய்யோத்தியாபுரி ஆக ஐம்பத்தாறு தேசமும் திக்கு விஜயம் செய்து வரவேண்டும். அஸ்பமானது நீர் இடும் இடத்தில் தண்ணீர் பந்தல் அமைக்க வேண்டும். அது*

லத்தி இட்ட இடத்தில் அன்ன சத்திரம் கட்ட வேண்டும் படுத்து பிரளும் இடத்தில் ஓர் தடாகமும் பட்டணமும் அமைக்கவேண்டும், எதிர்த்தவனை சம்மாரம் செய்ய வேண்டும் பணிந்தவரை பாதுகாக்க வேண்டும் ஜெயமுடன் திக்கு விஜயம் செய்து வருவாய் தம்பி சத்துருக்கனா.

**தளகர்த்தன் : வருதல்**

**ராமர் : வருகை**

தளகர்த்தனா தம்பியாகிய சத்துருக்கன் எங்கே அஸ்பம்
எங்கே நீர் மட்டு தனிமையாக வந்து புலம்புகிறாய் என்ன
நடந்தது சீக்கிரம் தெரிவிப்பாய்.

**தளகர்த்தன் : வசனம்**

**ராமர் : விருத்தம் கேதாரம்**

வைய்யகம் தன்னிலுள்ளோர் வணங்கிட அஸ்பயாகம்
செய்துமே வருவாய் என்று ஜெயம் பெற்றிருந்தேன்டா.

பைய்யவே அனுப்பினே னே பாங்குள்ள சத்துருக்கா நீர்மான்
அய்யய்யோ பாலர்கள் கைய்யால் அடி பட்டு மாண்டாயொடா.

**பாட்டு**

அய்யய்யோ என் செய்வேன் உள்ளம் உருகுதே சத்துருக்கனா.
இந்த அவதி வர உனக்கு எவரிட்ட சாபமோ சத்துருக்கனா

**விருது கூறிபோன சவுரியம் எங்கய்யோ சத்துருக்கனா**
**எந்தவிததத்திலும் யாகத்தை முடிப்பாய்**
**என்றிருந்தேன்டா சத்துருக்கனா.**
**அண்ணா வென்றெந்தனை அழைப்பாய்**
**என்றிருந்தேன்டா சத்துருக்கனா.**
**யாரை வனத்தில் அண்ணா வென்றழைக்குராய் சத்துருக்கனா.**
**அறியறன் பிர்மாதி தனக்கஞ் சாத தம்பி சத்துருக்கனா**
**அறியா குழந்தைகைய்யால் அடிபட்டு மாண்டாயோ**
**சத்துருக்கனா.**

**ராமர் வசனம்**

*ஆ என்ன செய்வேன் உன்னை இழக்கவா அஸ்பமேதியாகம் செய்தேன் உன்னை இழந்து எப்படியடா வாழப்போகிறேன் தளகர்த்தனா தம்பியை காண வேண்டும் புறப் படுவாய் ரெணக்களம்.*

**தளகர்த்தன் : வசனம்**
**ராமர் : வசனம்**

*அப்படியானால் தம்பியாகிய பரதனை அதிசீக்கிரம் அழைத்து வருவீர்.*

**பரதன்: வருதல்**
**ராமர் விருத்தம் காப்பி**

*பரதனே சொல்லை கேளீர் பார் வனம் தன்னிலே தான் பாலர்கள் இருவர்களால் நமது படைகளோ மடிந்த*

தப்பா அஸ்பத்தை பிடித்து கட்டி அதனுடன் சென்ற உன் தம்பி அவர்கள் கைய்யினால் மடிந்து விட்டானே பரதா.

**ராமர் வசனம்**

பரதா யாரோ வால்மீகர் ஆச்சிரமத்தில் இரண்டு சிறுவர்கள் இருந்து கொண்டு நமது அஸ்பத்தை பிடித்து கட்டியதும் அல்லாமல் நமது தம்பி சத்துருக்கனையும் மர்ணமூர்ச்சியாக்கி விட்டார்களாம் ஆனதால் நீர் சென்று அன்னவர்களை ஜெயித்து தம்பியையும் எழுப்பி கொண்டு அதிசீக்கிரம் வருவாய் பரதா.

**தளகர்த்தன் : வசனம்**

**ராமர் : வசனம்**

தளகர்த்தனா இப்போதும் தனிமையாக வந்தயே. சத்துருக்கன் பரதன் எங்கே. என்ன நடந்தது.

**தளகர்த்தன் : வசனம்**

**ராமர் : விருத்தம் காப்பி**

**அன்புள்ள பரதா உந்தன். ஆணுவம் எல்லாம் தோற்றம்**
**சின்னதோர் பயல்கள் கைய்யால் சேர்ந்தாயோ சிவலோகம்.**

**என்னதான் செய்வனடா என்னுயிர் துணைவனென்று**
**உன்னையே நினைந்திருந்தோன் ஒண்டியாய் விட்டாயொடா.**

**பாட்டு**

என்ன செய்வேன் எது செய்வேன் தம்பி பரதா.
உங்கள் இருவருக்கும் ஒரேழுத்தோ தம்பி பரதா.
உன்னைபோல் சகோதரர்கள் தம்பி பரதா.
இந்த உலகத்திலும் காண்பேனடா

**துரிதம்**

தம்பிபரதா
இந்த உலகத்தையும் ஆளுவேனே தம்பி பரதா.
பிரியாதிருந்த உன்னை தம்பி பரதா
நான் பிரிந்து விட்டேன் கொடும் பாவி தம்பி பரதா.

**வசனம்**

*ஆ தம்பி பரதா உன்னையும் பறி கொடுத்து விட்டேனே இனி என்னடா செய்வேன் தளகர்த்தனா இளி அரட்சணம் இருக்கலாகாது புறப்படுவாய் போர்களம்.*

**தளகர்த்தன் : வசனம்**

**ராமர் : வசனம்**

*தளகர்த்தனா உன் மனதின் படி தம்பியாகிய லெட்சு மணனை அதிசீக்கிரம் அழைத்து வருவீர்.*

**லெட்சுமணன் வருதல்**

**ராமர் விருத்தம் கேதாரம்**

**பரிது குலம் லெட்பணா சொல்லை கேளாய்**
**பார் வனம் தன்னிலேதான் பாலர்கள் இருவர்கள் இருந்து கொண்டு.**
**பரிதன்னையும் பிடித்து பட்டயத்தையும் கிழித்தெரிந்து,**
**சத்துருக்கனையும் பரதனையும் மடித்துவிட்டார்களப்பா.**

**வசனம்**

*லெட்சுமனா யாரோ வால்மீகர் ஆச்சிரமத்தில் இரண்டு சிறுவர்கள் இருந்து கொண்டு நமது அஸ்பத்தை பிடித்து கட்டியதும் அல்லாமல் தம்பிகளாகிய பரதன் சத்துருக்கனையும் மர்ணமூர்ச்சியாக்கி விட்டார்களாம் ஆனாதால் நீர் சென்று அன்னவர்களை வென்று உன் தம்பி தமயனை அழைத்துக் கொண்டு அஸ்பத்தை மீட்டுவருவாய் லெட்பணா.*

**தளகர்த்தன் : வசனம்**

**ராமர் : வசனம்**

*தளகர்த்தனா இப்போதும் நீர் தனிமையில் வந்திருக்கிறாயே லெட்சுமணனும் மடிந்து விட்டானா.*

**தளகர்த்தன் : வசனம்**

**ராமர் : விருத்தம் காப்பி**

**செப்பிடவே லெட்சுமணன் மூர்ச்சையான சேதிதன்னை**
**ஸ்ரீராமர் செவியில் கேட்டு ஒப்பில்லா தம்பிமாரே**

உங்களுக்கு ஒன்றாக எழுதினானே பிர்மதேவன்.

சற்பணையின் காலந்தானோ ஜானகியை

கானகம் விட்ட சதி இதுவோ

தவறும் காலம் இப்புவியில் என்னை

தனியாக விட்டு இறந்தாயோ

இளைய தம்பி லெட்பணா.

**பாட்டு**

பாவி இதற்கோ அஸ்பயாகம் செய்தேன்.

பாதகத்தை கண்ணால் பார்க்க ஆளாகினேன்.

ஆவிக்கிசைந்த தம்பி செட்சுமன தம்பி

அங்கம் உருகுதடா தம்பி லெட்பணா.

பொல்லாத காலத்திலே சத்துருக்கா தம்பி.

**சுருள்**

போனாயோ தேசம் சுற்ற சத்துருக்கா தம்பி.

என்னா நான் செய்வனடா தம்பி மார்களே அய்யோ

ஏது நான் செய்வனடா தம்பிமார்களே ஐய்யோ.

பொன்னான மேனி யெல்லாம் தம்பி மார்களே ஐய்யோ

புழுதி பிரளுதடா தம்பிமார்களே ஐய்யோ.

**வசனம்**

*தளகர்த்தனா தம்பிமார்கள் மூவர்களையும் இழந்து இனி இங்கு இருப்பது முறையில்லை படைகளை திரட்டுவாய் புறப்படுவாய் ரெணக்களம்.*

**தளகர்த்தன் : வசனம்**

**ராமர் : பாட்டு**

**சண்டைக் கெழுந்திருளினார்**
**ஸ்ரீராமச்சந்திரன் சண்டைக் கெழுந்தருளினார்.**
**சண்டைக் கெழுந்திருந்தார் அண்டம் எழும் நடுங்க**
**எண்டிசை அண்டகோளம் இடிந்து விழும்படி (சண்)**

**வசனம்**

*தளகர்த்தனா நமது தம்பிமார்களை அடித்த சிறுவர்கள் எங்கே இருக்கிறார்கள்.*

**தளகர்த்தன் : வசனம்**

**ராமர் : வசனம்**

*சட் இவர்களாவது என் தம்பி மார்களை அடிப்பதாவது என்னப்பா தெரிவிக்கிறாய்.*

**தளகர்த்தன் : வசனம்**

**ராமர் : பாட்டு தர்க்கம்**

***ராமர் :*** *எவனடா..........*

***குசன்:*** *நானடா...............*

**ராமர்**

*இங்குவந்த என தருமை தம்பிமாரை கொன்றவர்கள் எவனடா எவனடா எவனடா.*

**குசன்: இங்கு..........**

**ராமர்: வீரனே .........**

**குசன் : வீரன்தான்**

**ராமர் : வீராதி வீரனே சூரனோ**

**குசன் : வீராதி**

**ராமர் : எவனடா**

**குசன் : நானடா**

**ராமர் வசனம்**

அடே பயல்களா என்ன துணிச்சல் உங்களுக்கு எவனடா என்றால் நானடா என்று ஆணவத்துடன் பேசுகின்றீர் மரியாதையாக தெரிவிக்கிறேன். உங்கள் வர முறையை தெரிவித்து விட்டு ஓடிவிடுங்கள்.

**குசன் : வசனம்**

**ராமர்**

கோலெடுத்து மாடு மேய்க்க குண மறியா பாலர்களா. வேலெடுத்து சண்டைசெய்வீரோ அடே பாலர்களா வேலெடுத்து சண்டை செய்வீரோ.

**குசன் : கோலெ .......**

**ராமர்**

ஆடு ஓட்டி மேய்க்க வழி அரியாத பாலர்களா அரசன் பேரை சொல்லாகுமோ அடே பாலர்களா அரசன் பேரை சொல்லலாகுமோ.

**ராமர் வசனம்**

அடே பாலர்களா ஆடுமாடு மேய்க்க கூட வழி அறியாத பாலர்கள் அரசனை பார்த்து வாடா போடா என்று பேசுவது முறையில்லை உங்களை பெற்றெடுத்த தாய் தந்தையர்களின் பெயரென்ன தெரிவியுங்கள்.

**குசன்-வசனம்**

**ராமர்-குசன் பாட்டு தர்க்கம்**

**யாரடா நீங்களார் சொல்லுங்கடா**
**பயல்களா நீங்களார் சொல்லுங்கடா**
**பாங்குள்ள வீரர்களா**
**ஓங்கி கோதண்டம் கைய்யால் ஏனோ மடியக் காலம்.**

**குசன் : ஆரென்ன.....**

**ராமர்**

சின்னஞ்சிறுவர் நீங்கள் கேளடா பயலே (சின்) சின்னஞ்சிறுவர் நீங்கள் இன்னார் இனியர் என்று உன்னை மகிழ்ந்து பெற்ற அன்னை தந்தை யாரடா.

**குசன் - ஆணுலும்**

**ராமர்**

ஆணும் ஏதுக்கடா உங்களுக்கிந்த (ஆணு) ஆணுவம் ஏதுக்கடா வீணான பிள்ளைகளா. நாணல் துரும்பை போல் ஏனே மடியக் காலம்.

**ராமர் வசனம்**

குழந்தைகளா உங்கள் ஆணுவத்தை அடக்கி உங்கள் வரமுறையை தெரிவியுங்கள்.

**குசன் : வசனம்**

**தளகர்த்தன் : வசனம்**

**ராமர் : வசனம்**

தளகர்த்தனா வீரமுள்ள குழந்தைகள் வீரத்திலும் சிறந்தவர்களாகத்தான் இருப்பார்கள் நாம் நம்முடைய வர முறையை முதலில்தான் தெரிவிப்போமே.

**ராமர் : வசனம்**

குழந்தைகளா அய்யோத்தியாபுரியை ஆளும் ஸ்ரீராமச்சந்திரன் என்பது எனதுபெயர். எங்கே உங்கள் வரமுறையை தெரிவியுங்கள் பார்க்கலாம்.

**குசன்: வசனம்**

**ராமர்: வசனம்**

குழந்தைகளா அந்த மூன்றுவித ராமனும் நான்தான். சப்த சாகரம் அண்ட பூவனமெல்லாம் உண்டு திருப்பக் கடலில் ஆலந்துளிர்மேலில் பள்ளி கொண்டபடியினால் சாப்பாட்டு ராமன் என்பதும் என் பெயரே.

தேவர்கள் குறையை நீக்க அரக்கர்களை சம்மாரம் செய்யும் பொருட்டு பத்து அவதாரம் எடுத்தேன் அதனால் பலதுளி ராமனும் நானே.

அய்யோத்தியாபுரியில் தசரத சக்கர வர்த்திக்கு புத்திரகலியை நீக்க புத்திரனாக பிறந்தேன் அதனால் அய்யோத்தி ராமனும் நானே இந்த மூன்று வித ராமனும் நான்தான் எங்கே இப்போதாவது உங்கள் வரமுறையை தெரிவியுங்கள்.

**குசன் : பாட்டு வசனம்**

**ராமர் : விருத்தம் மோகனம்**

**துணைவரை அடித்ததாதலே துணிவினால் ஆழ்மை கொண்டு**
**இணையில்லா வீரன் போலே என் முன்னே சொல்லவந்தாய்.**
**கணையது தொடுத்து உங்கள் காரியம் தனையடக்கி**
**முனைகுலைந்திடவே இப்போ.**

**பாட்டு**

**முடிக்காமல் விடுவேனோ ராமன்**
**உங்களை பிடிக்காமல் விடுவானோ எமன்.**
**துடுக்கான சுவனத்தை அடிக்க குருந்தடி**
**தேவையில்லை யென்பார்கள் அதுபோல (முடி)**

**வசனம்**

அடே பயல்களா என் தம்பி மார்களை அடித்த ஓர் தைரிய த்தினால் என்னையும் யுத்தம் செய் சொன்னீர்கள்.

நல்லதிருக்கட்டும். ஒரு நாயை அடிக்க பெரிய தடி தேவையில்லை உங்களை நாயை அடிப்பது போல அடிக்கிறேன்.

**குசன் விரு - பாட்டு வடம்**

**ராமர் குசன் பாட்டு தர்க்கம்**

**ராமர்**

இளங்கன்று பயமறியாதடா பயலே
எந்தன் வார்த்தையை சற்று கேளடா
தனமுள்ளவரானால் தான் பேசுவார்களோ
கனமாக பேசாதே காட்டில் வசிக்குறாய்.

**குசன்: காட்டில் ...**

**ராமர்**

சிவலோகம் சேர்த்திட தெரியுமா
சின்னஞ்சிறுபிள்ளை கெடுமதி அறியுமா
பாவம் சிசுவென்று பார்த்தேனடா உங்களை
கோபங் கொண்டேனானால்குலை மோசம் தவராது.

**குசன்: தவராது ...**

**ராமர்**

முடியாது என்றுமே பேசுராய் தலைவிதிவசம்
முடிந்தல்லோ ஏசுராய்.
சடிதியிலே ராம பாணம் தொடுத்திட்டால்.
தப்பாது உன்னுயிர் அப்புறம் போய்விடு.

**குசன்: போதுமோ ......**

**ராமர்**

வெல்லாத என்ற சொல் தள்ளடா பயலே
வில்லம்பு எடுத்தன்முன் நில்லடா
கல்லாத கவி கற்று துள்ளாத காளையே
சல்லடை கண்போல சில்லை சில்லையாக்குவேன்.

**குசன் : சல்லடை ........**

**ராமர்**

அண்டசராசரம் ஒன்றடா பயலே அரிராமர் என்றுமே பேரடா
கண்ட துண்டமாக கணையாலே நறுக்குவேன்
வேண்டாமடா வீரக்கோதண்டம் பொல்லாது.

**குசலவன் வீர வசனம்**

**ராமர் : கவி**

கதளி வீரர்கள் களைத்திட வைய்யினும்
குதளை வாயினால் குழவிகள் வைய்யினம்
மதனலீலையில் மங்கையர் வைய்யனும்
இது முறை செவிக்கு இன்பம் விளைவிக்குமே.

**வசனம்**

*தளகர்த்தனா ரெணகளத்தில் யுத்தம் நடக்கும்போது எதிரிகளின் வார்த்தைகள் மீது ஞாபகம் வராது. வில்லை வளைத்து நாணி தொடுக்கவே எண்ணங்கள் வரும்.*

சிறு குழந்தையானது பெரியவர்களை பார்த்து எவ்வளவு கொடூரமான சொற்களை சொன்ன போதிலும் அக்குழந்தைகளை வாரி அணைத்து முத்தமிடத்தான் ஞாபகம் வருமே தவிர கோபமே வராதாம். கணவன் மனைவி சரச சல்லாபமாக இருக்கும்போது மனைவியோ கணவனிடம் எப்படி பேசிய போதிலும் மனைவியின் மீது கணவன்மார்களுக்கு கோபமே வராதாம். அது போல இவர்களோ சிறுகுழந்தைகள் அதனால் இவர்கள் மீது எனக்கு கோபமே வரவில்லை, பார்க்கலாம்.

**ராமர் : பாட்டு தர்க்கம்**

என்ன வார்த்தை சொன்னாயொடா நீ சிறுபயல்களா
ஏது வார்த்தை சொன்னாயொடா நீ
என்ன வார்த்தை சொன்னாயொடா சின்னஞ்சிறு பயல்களா
உன்னையே நான் கொல்லுவது உண்மையை அறிந்திடாமல்.

**குசலவன்: கொல்ல ......**

**ராமர்**

மணலிலும் ஆடாதென்றாயே
வல்லவன்கை பம்பரமும் மணலிலும் ஆடாதென்றாயே.
மணலிலும் ஆடாதென்றாய் ஆடும் போது எங்கே கண்டாய்
கணை தொடுத்தாலே நீங்கள் கடைத்தேர போவதில்லை.

**குசலவன்: கண்டதோ ......**

**ராமர்**

எமலோகம் சேர்ப்பேன் என்றாயே சிறு பயல்களா
எமலோகம் சேர்ப்பேன் என்றாயே

எமலோகம் சேர்ப்பேன் என்றாய் எமனை நீ எங்கே கண்டாய்
சமனாக பேசாதடா தருதலைபயல்களா.

**கவி**

**வில்லது வளைந்தது என்றும் வேழமது உறங்கிற்று என்றும்**
**வல்லியம் பதுங்கிற்று என்றும் வளர்கடாவிந்திற்று என்றும்**
**புல்லர்தம் சொல்லுக்கஞ்சி பொருத்தனர் பெரியோர் என்றும்**
**நல்லதென்று இருக்க வேண்டாம் நமமென அறிகுவாயே.**

**வசனம்**

அடே குழந்தைகளா வில்லானது வளைகிறேதே என்று வளைத்து கொண்டே போனால் அது ஒடிந்து விடும். வேழம் என்ற யானை உறங்குகிறது என்று அதன் முதுகிலே தட்டினோமானால் அதனால் நம் உயிருக்கே ஆபத்து ஏற்படும். வல்லியம் என்ற புலியானது மனிதனை கண்டு பயந்தோடுகிறது என்று அதை விரட்டினாலும் அதனாலும் உயிருக்கு ஆபத்து ஏற்படும்., செம்மறிகடா பின்னுக்கே வருகிறது என்று நாம் அலட்சியமாக நடந்தால் ஓடி வந்து முட்டிவிடும், இதுகளை போல துஷ்டர்கள் வார்த்தைகளுக்கு பெரியோர்கள் பொருத்து போகிறார்கள் என்று நினைந்தீர்களேயானால் அதன் விளைவு பின்னுக்குதான் தெரியும்.

**குசன் : கவி-வசனம்**

**ராமர் : விருத்தம் மோகனம்**

**இலங்கையில் ராவணன் கும்பகர்ணன் முதலிய**
**ராட்சதர்களை ஏமபுறம் அனுப்பி வைத்த பாணமும்**
**பிலங்களும் போகவில்லை.**
**கலங்குவீர் சிறுவர் என்று கைதாழ்ந்திருந்தேன் இது வரையில்.**

**பாட்டு**

**இனிமேல் விடுவதில்லை சொன்னேன்**
**இப்போ துணிவாக நில்லுங்கள் முன்னே**
**பனி மூடினார் போல் பாணத்தால் உங்களை**
**முனையை ஒடித்து காரியம் முடிக்காமல் விடுவேனே. (இனி)**

**வசனம்**

*அடே பயல்களா இலங்கையில் ராவணன், கும்பகர்ணன் முதலிய ராட்சதர்களை எமபுறம் அனுப்பியவன் நான். அந்தராவணனின் வீரத்தின் பெருமை உங்களுக்கு தெரியுமா? இசையினாலே மயக்கி ஈஸ்வரனை வணங்கி மூவலுகிலும் தன்னை வெல்ல எவராலும் முடியாதவாறு ராவனேஸ்வரன் பட்டம் பெற்றவன் அவனிடம் நான் போர் புரியும்போது தன் முடியிழந்தான், படையிழந்தான் தன் கைய்யில் இருந்த ஆயுதம் அத்தனையும் இழந்து நிராயுத பாணியாக சோர்ந்து தனிமையாக நின்று கொண்டிருந்தான்,*

அவனின் நிலையை பார்த்து எனது கை பாணம் எய்ய மறுத்து விட்டது காரணம் ஓர் வீரன் மற்ற வீரனிடம் போர் புரியும்போது தன்னைபோல் அவனும் படைபலத்தோடு இருக்கவேண்டும். அதுதான் வீரனின் அழகு தூங்கியவனை கொல்வது வீரர்க்கு அழகல்ல அதனால் ஏ ராவணா.

இன்று போய் நாளை வா என்றேன் நீயோ தனிமையாகிவிட்டாய் உன்னிடம் போர்புரிய என் மனம் இடம் தரவில்லை இன்று போய் உன் படைகளை திரட்டி நாளை வா என்றேன் என்னுடைய பெருமை எங்கே இந்த இளம் பருவத்தில் இவ்வளவு ஆணவத்துடன் பேசும் உங்கள் குணம் எங்கே இன்னும் உங்களுக்கு அவகாசம் தருகிறேன் வரமுறையை தெரிவித்து விடுங்கள்.

**குசலவன் : வசனம்**

**தளகர்த்தன் : வசனம்**

**ராமர் : கவி**

**துஷ்டனரும் பொன்னும் துடியும் மரகதமும் அச்சமர**
**பேசுகின்ற ஆரிழையும் கண்டித்த எள்ளும் இளநீறும்**
**தண்டித்தவர்க்கே தர்மம்.**

**வசனம்**

தளகர்த்தனா துஷ்டனர் என்ற திருடனை பிடித்து உண்மையை சொல் என்றால் சொல்லுவானா அவனை

அடியோ அடியாக அடித்தால்தான் உண்மையை சொல்லுவான்.

பொன்னை அனலில் இட்டு காச்சி உறுவு செய்தால்தான் அதன் பிரகாசம் தெரியும் துடி என்ற மிருதங்கத்தை நன்றாக வார் இழத்து கட்டி நல்ல வித்துவான்களை கொண்டு வாசிக்க செய்தால்தான் அதன் ஓசையை கேட்க முடியும். மரகதம் என்ற உயர்வகை அணிகலனை அணியவேண்டியவர் அணிந்தால்தான் அதன் பெருமையை அறியமுடியும்.

அடங்காமல் பேசும் .மனைவி மார்களை அடியோதனமாக அடித்தால் தான் வாய் அடங்குவார்கள் என்னை செக்கிலிட்டு ஆட்டினால் தான் அதன் எண்ணையை பெற முடியம், இளநீரை கத்தியினால் சீவினால்தான் அதன் நீரை பருக முடியும். இதுகளை போல துஷ்டர்களுக்கு சிஷ்ட பரிகார்ணம் செய்தால்தான் அடங்குவார்கள். இவர்களுக்கு இனி தாட்யணியம். கிடையாது. பாணம் பிரயோகம் செய்வதே மேல்.

**ராமர்: பாட்டு தர்க்கம்**

என்னா சொன்னாயொடா பயல்களா உங்களை இந்திராஸ்திர பிரயோகம் தொடுத்தேன் பார்.

**குசலவன் : முன்னே .....**

**ராமர்**

அனலா எரிக்கச் சொல்லி பயல்களா உங்களை
அக்கினியாஸ்திர பிரயோகம் தொடுத்தேன் பார்.

**குசலவன் : வந்தால்....**

**ராமர்**

*நாச படுத்துச் சொல்லி பயல்களா உங்களை நாகாஸ்திர பிரயோகம் தொடுத்தேன்பார்.*

**குசலவன்: கிட்டே....**

**ராமர்**

*பேசும் உன் வாய் கிழிக்க பயல்களா உங்களை பிர்மாஸ்திர பிரயோகம் தொடுத்தேன் பார்.*

**குசலவன்: நாடி....**

**ராமர் : வசனம்**

*தளகர்த்தனா என்னிடம் உள்ள அஸ்திரங்கள் யாவும் தீர்ந்துவிட்டது. இக்குழந்தைகள் ஒருவரும் அஞ்சவில்லை எல்லா பாணங்களும் வீணடித்து விட்டார்கள் இனி என்ன செய்யலாம்.*

**தளகர்த்தன் : வசனம்**

**ராமர் : வசனம்**

தளகர்த்தனா எத்தனையோ அரக்கர்களை யெல்லாம் வென்றேன். ஒருவருக்கும் ராமபாணம் விட்டதில்லை இச்சிறுவர்களுக்கா ராமபாணம் தொடுப்பது என்று தான் நினைக்கின்றேன்.

**தளகர்த்தன் : வசனம்**

**ராமர் : பாட்டு**

பிரசண்ட கோதண்டம் எடுத்தேன்
ஸ்ரீராமச்சந்திரன் பிரபல்யமாய் சரம் தொடுத்தேன்
அண்ட ஏழும் நடுங்க கண்ட மனிதரெல்லாம் எண்டிசை
அண்ட கோளம் இடிந்து விழும்படி. (பிர)

**வசனம்**

*தளகர்த்தனா அக்குழந்தைகளின் சிரசுக்கு லெக்கு வைத்து ராமபாணம் தொடுத்துள்ளேன். அவர்கள் என்ன ஆனார்கள் பார்த்து வருவீர்.*

**தளகர்த்தன் : வசனம்**

**ராமர் : வசனம்**

*தளகர்த்தனா என்ன ஆச்சிரியம் நான் விட்ட பாணம் அவர்களுக்கு மாலையாக விழுந்திருக்கிறதா அவர்கள் ஏதேனும் பதிலுக்கு விட்டுள்ளார்களா?*

**தளகர்த்தன் : வசனம்**

**ராமர் : வசனம்**

அந்த அஸ்திரத்தை எடுத்து அதில் என்ன அட்சரம் ஸ்தாபித்திருக்கிறது என்று எடுத்து பார்ப்பாய்.

**தளகர்த்தன் : வசனம்**

**ராமர் : வசனம்**

தளகர்த்தனா சீதை இன்னும் உயிரோடுதான் இருக்கிறாள் உக்கிரவீரசக்திவேல் என்றால் என் மனைவி சீதையினிடத்தில் இருப்பது இவர்களுக்கு எப்படி கிடைத்திருக்கும்.

**தளகர்த்தன் : வசனம்**

**ராமர் : வசனம்**

*அப்படியல்ல பெற்ற குழந்தைகளாக இருந்தால்தான் உக்கிர வீர சக்திவேல் கொடுப்பாள். மேலும் நான் விடும் பாணம் அவர்களுக்கு மாலையாகவும் அவர்கள் விடும் பாணம் எனக்கு பாத நமஸ்காரம் செய்வதாலும் இதில் ஏதோ சந்தேகம் தென்படுகிறது, சண்டை செய்வதில் இனி பிரயோஜனம் கிடையாது. எப்படியாவது அவர்களின் பிரத்தை அறிந்து வாருங்கள்.*

**தளகர்த்தன் : வசனம்**

**ராமர் : வசனம்**

*தளகர்த்தனா சீதையின் மைந்தர்கள் என்று ஒப்பு கொண்டு விட்டார்கள். நான் நினைந்தது சரியாகி*

விட்டது. ஆனால் சீதைக்கு வரம் கொடுத்தது ஒரு குழந்தை ஆனால் இரண்டு குழந்தைகள், இருக்கின்றார்கள் அதன் விபரந்தான் புரியவில்லை.

**தளகர்த்தன் : வசனம்**

**குசன் : வசனம்**

**ராமர் : வசனம்**

தளகர்த்தனா நம் குழந்தைகள் என அழைத்து சென்றோமானால் இவ்வுலகம் நம்மை பார்த்து என்ன சொல்லும் இகழ்ச்சி செய்வார்கள்

**கவி**

**மைந்தனை தேடலாகும் மனைவியும் தேடலாகும் அண்டமாம்**
**நாடு பூமி அனைத்தையும் தேடலாகும். கூடபிறந்த**
**சகோதரரை தேடுவது அரிதாகும்.**

**வசனம்**

பெற்ற குழந்தை இறந்து விட்டால் வேறு குழந்தை பெற்று கொள்ளலாம். முதல் மனைவி இறந்து விட்டால் இரண்டாவது மனைவியை அடையலாம். நாட்டை எதிரியிட இழந்தாலும் பிறகு எதிர்த்து போரிட்டு மீட்டு விடலாம். ஆனால் தன்னுடன் பிறந்த தம்பிமார்களை இழந்து விட்டால் அவர்களை திரும்பவும் அடைய

முடியாது. அதனால் அவர்களை போல நானும் மடிவதுதான் முறை. நீங்கள் அடிக்கடி சம்பளம் சம்பளம் சம்பளம் என்று கேட்டீர்களே நாட்டையே உங்களிடம் ஒப்படைக்கிறேன் உங்களில் ஒருவரை மன்னனாக்கி வாழ்ந்து வாருங்கள்.

**ராமர் விருத்தம்**

**பூப்பாளம்**

**தாரத்தை தானிழந்து தம்பிமார் தனையிழந்து**
**சீரற்ற பிள்ளையாலே என் சீமைகள் எல்லாம் தோற்றேன்.**
**பாரற்ற பாணத்தாலே பாலர்கள் மேல் விட ஒண்ணாது**
**நாரற்ற பூவை போல ஸ்ரீராமனும் மூர்ச்சையானார்.**

**வால்மீகர்: எழுப்புதல்**

**ராமர்: விருத்தம்**

**நாதனே முனியே அய்யா நான் மறை மறவேன் யானும்**
**வேதனைக்குள்ளவன் பட்டேன் அதுவும் இல்லாமல்**
**இப்போ சீதைநாயக்கு தானும் செல்வர்கள் இரண்டு ஏது**
**ஏதய்யா எனக்கு வேண்டாம் இன்னமும் பழிச் சொல்லாகும்.**

**வசனம்**

சுவாமி தாங்களின் அஸ்தம் பட்டு நாங்கள் உயிர் பெற்றது எங்கள் பாக்கியமே ஆனால் சீதைக்கு நான் வரம் கொடுத்தது ஒரு குழந்தைக்கு இப்போது இரண்டு

குழந்தைகள் இருக்கின்றார்கள் அதுதான் சந்தேகம் அதன் விபரத்தை தெரிவிக்க வேண்டும்.

**வால்மீகர் : வசனம்**

**ராமர் : வசனம்**

சுவாமி தாங்கள் சொல்வது நான் ஒத்து கொள்கிறேன் ஆனால் இவ்வுலகம் ஒத்து கொள்ள வேண்டும். நானே என் மனைவியின் மீது எனக்கு எள்ளவும் சந்தேகம் கிடையாது. உலக அறிவேதான் அன்றும் அக்கினியில் இறங்க செய்தேன். இப்போதும் இவ்வுலகம் அறிய வேண்டும். தற்போது அக்கினியை வளருங்கள் அதில் சீதையும் குழந்தைகளும் இறங்கி வரட்டும் பிறகு அழைத்துச் செல்கிறேன்.

**வால்மீகர் : வசனம்**

**ராமர் : வசனம்**

சுவாமி தாங்களும் அய்யோத்திக்கு வந்து எனக்கு
மகுடமும் குழந்தைகளுக்கு இளவரசு பட்டமும் சூட்ட வேண்டும்.

**வால்மீகர் : வசனம்**

**ராமர் : பாட்டு**

போவோமே வாராய் அய்யோத்திற்கு (போ)
போவோம் வாராய் இப்போ பூமன் ஜனகள் பெண்ணே (போ)
தம்பி பரதனே சத்துருக்கனே வாராய்
சுந்திரலெட்பணா சொகுசுடன் அனைவரும். (போ)

**வசனம்**

அருமை தம்பி மார்களே சேனைகளே, கண்மணிகளா அருமை சீத்தா வாருங்கள் அனைவரும் அய்யோத்திற்கு செல்வோம்.

முற்றும்

சுபம். சுபம். சுபம்.

# பின்னிணைப்பு - 1

## லவகுசா நாடகம்

### பாடல் முதற்குறிப்பகராதி


| வ.எண். | பாடல் முதற்குறிப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | அக்கண்ணனும் | 66 |
| 2. | அகவிலைக்காரர்கள் | 33 |
| 3. | அடடா தம்பி | 100 |
| 4. | அடவுடன் | 108 |
| 5. | அண்ட சராசரம் | 126 |
| 6. | அந்த அஸ்திரத்தை | 112 |
| 7. | அந்த வில்லை | 58 |
| 8. | அம்புவியாள் | 84 |
| 9. | அய்யய்யோ | 114 |
| 10. | அரிசி | 35 |
| 11. | அழுக்கினை | 72 |
| 12. | அன்புள்ள | 116 |
| 13. | அனலா | 132 |
| 14. | ஆயுதமே | 99 |
| 15. | ஆரிலோர் | 96 |
| 16. | ஆலிலைமேல் | 24 |
| 17. | இந்த அபவார்த்தை | 73 |

| | | |
|---|---|---|
| *18.* | இந்த இரண்டு | *67* |
| *19.* | இருவர் | *41* |
| *20.* | இலங்கையில் | *129* |
| *21.* | இவன் | *69* |
| *22.* | இளங்கன்று | *125* |
| *23.* | இன்னும் காணேனே | *105* |
| *24.* | இனிமேல் | *129* |
| *25.* | உங்களை | *99* |
| *26.* | உத்தம | *80* |
| *27.* | ஊர்கொண்ட | *112* |
| *28.* | எந்தன் வார்த்தையை | *92* |
| *29.* | எந்தனை நீ | *100* |
| *30.* | எமலோகம் | *127* |
| *31.* | எவரிட்ட | *43* |
| *32.* | என் பெயர் | *53* |
| *33.* | என்ன செய்வன்டா | *83* |
| *34.* | என்ன செய்வேன் | *117* |
| *35.* | என்ன சொன்னாயொடா | *131* |
| *36.* | என்ன சொன்னீர் | *97* |
| *37.* | என்ன பாவம் | *77* |
| *38.* | என்ன வரம் | *60* |
| *39.* | என்ன வார்த்தை | *127* |

| | | |
|---|---|---|
| 40. | என்னுடன் குலத்தின் | 109 |
| 41. | எனக்கு | 87 |
| 42. | எனக்கொரு | 45 |
| 43. | எனது தம்பி | 83 |
| 44. | ஏது இவன் | 70 |
| 45. | ஏதுதான் | 69 |
| 46. | ஏதேதோ | 76 |
| 47. | ஐந்துமாத | 65 |
| 48. | ஓடி விளையாடவே | 44 |
| 49. | கடைமாது | 76 |
| 50. | கண்ணிற்கினிய | 43 |
| 51. | கதளி | 126 |
| 52. | காட்டினில் | 110 |
| 53. | காரணமாம் | 24 |
| 54. | காவல் காரரே | 68 |
| 55. | கானகம் | 65 |
| 56. | குற்றம் | 71 |
| 57. | கூத்து | 80 |
| 58. | கூனி | 88 |
| 59. | சண்டை | 120 |
| 60. | சத்தியவான் | 97 |
| 61. | சத்துருக்கன் | 93 |

| | | |
|---|---|---|
| 62. | சபாஷ் | 101 |
| 63. | சரிகை | 53 |
| 64. | சருணமய்யா | 109 |
| 65. | சிந்தையும் 32 | |
| 66. | சிவலோகம் | 125 |
| 67. | சின்ன | 55 |
| 68. | சீர்பெறும் | 111 |
| 69. | சுபதினம் | 52 |
| 70. | சுவாமி என்ன | 50 |
| 71. | சுவாமி தாங்களும் | 137 |
| 72. | செப்பிடவே | 118 |
| 73. | செப்புதல் | 68 |
| 74. | சொற்பனம் | 50 |
| 75. | தடுத்து எந்தன் | 75 |
| 76. | தடுத்து சொல்லவும் | 79 |
| 77. | தம்பி சத்துருக்கா | 112 |
| 78. | தம்பி பரதா | 117 |
| 79. | தம்பி லெட்பணனே | 92 |
| 80. | தளகர்த்தனா எத்தனையோ | 133 |
| 81. | தளகர்த்தனா சீதை | 134 |
| 82. | தளகர்த்தனா தம்பியாகிய | 114 |
| 83. | தன்னுடன் | 93 |

| | | |
|---|---|---|
| 84. | தாரத்தை | 136 |
| 85. | துணைவரை | 124 |
| 86. | தும்பினில் | 95 |
| 87. | துஷ்டனரும் | 130 |
| 88. | தூரச்செல்லடி | 63 |
| 89. | தெள்ளிய | 39 |
| 90. | தேசதேச | 24 |
| 91. | தேசதேசத்து | 36 |
| 92. | தேசதேசாதி | 25 |
| 93. | தேடித்தேடி | 42 |
| 94. | தேவாலயங்களில் | 30 |
| 95. | நன்மையும் | 27 |
| 96. | நாடுதனை | 50 |
| 97. | நாதனே | 136 |
| 98. | நேசமான | 46 |
| 99. | பணங்களை | 42 |
| 100. | பரதன் | 93 |
| 101. | பரிது குலம் | 118 |
| 102. | பாவி இதற்கோ | 119 |
| 103. | பாவி நான் | 96 |
| 104. | பிரசண்ட | 133 |
| 105. | பிள்ளையில்லா | 37 |

| | | |
|---|---|---|
| 106. | பிள்ளையில்லாத | 37 |
| 107. | புத்திரன் இல்லையென்றால் | 38 |
| 108. | புத்திரன் இல்லையென்று | 45 |
| 109. | பொன் | 42 |
| 110. | போடா | 82 |
| 111. | போபோ | 85 |
| 112. | போவோமே | 137 |
| 113. | போனாயோ | 119 |
| 114. | மணலிலும் | 127 |
| 115. | மதிவளர் | 29 |
| 116. | மருந்துபோல் | 51 |
| 117. | மறையோர் | 62 |
| 118. | மாதம் | 33 |
| 119. | மாதவ | 49 |
| 120. | மாதை | 88 |
| 121. | மாமுனி | 89 |
| 122. | மானமெல்லாம் | 98 |
| 123. | மானே | 55 |
| 124. | முடிக்காமல் | 124 |
| 125. | முடியாது | 125 |
| 126. | முறைசெய்து | 36 |
| 127. | மைந்தனை | 135 |

| | | |
|---|---|---|
| 128. | யாராடா | 122 |
| 129. | யானைகள் | 87 |
| 130. | வசந்த முல்லை | 54 |
| 131. | வண்ணானிவன் | 70 |
| 132. | வண்ணானுக்குள்ள | 72 |
| 133. | வணங்கின | 41 |
| 134. | வர்ணமாம் | 102 |
| 135. | வழிநடை | 48 |
| 136. | வார்த்தையை | 94 |
| 137. | வாரும்தம்பி | 88 |
| 138. | வாறுதி | 112 |
| 139. | விட்டுவர | 96 |
| 140. | விட்டுவிடு | 71 |
| 141. | விநாயகனே | 23 |
| 142. | வில்லது | 128 |
| 143. | வெல்லாத | 126 |
| 144. | வேதம் | 34 |
| 145. | வேதாங்கமப்படி | 33 |
| 146. | வேதியர் | 52 |
| 147. | வைய்யகம் | 114 |
| 148. | ஜானகியே | 61 |